வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu வார மலர் ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 05 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 364 பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


07 ஏரிப்படுக்கையில் அடுக்குமாடி ஆக்கிரமித்தது வெள்ளம்


08 ஜே.வி.பி.யின் தேர்தல் வரலாறும் எதிர்கால வாய்ப்புக்களும்


09 தமிழரசின் தலைமைப் பதவியை கிழக்குக்கு ஏன் வழங்கக்கூடாது?



11 இலங்கை பல்கலை கழகங்களில் கற்பித்தல் மொழியும் யாழ்.பல்கலையும்

# தமிழ் மக்களுக்கு தீர்வு சந்தேகமே!

## உலகத் தமிழர் பேரவையினரிடம் எடுத்துரைத்தார் ஆறு திருமுருகன்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 10

**தமிழரின் பிரச்னைக்கு தீர்வு கிடைக்குமா என்பது சந்தேகம் நிலவுகின்றது. ஏனென்றால் சாதாரணமாக இந்துக்களின் பிரச்னைக் குக்கூட தீர்வு கிடைக்காத நிலையில் தமிழருக்கு எவ்வாறு தீர்வு கிடைக்கும் என நம்ப முடியாத நிலை காணப்படுக்கிறது என தெல் லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் நல்லை ஆதீனத்தின் செயலாளருமான கலாநிதி ஆறு திருமுருகன் தெரி வித்தார்.**



உலக தமிழ்ப் பேரவை யினர் நல்லை ஆதீன முதல் வரை நேற்று சந்தித்து கலந் துரையாடியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

இன்று நீங்கள் எல்லோ ருமாக இங்கே வந்திருக் கிறீர்கள். நீங்கள் யார் என்று எங்களுக்கு

15

# இருளில் மூழ்கியது இலங்கை!

## திடீர் மின் தடையால் மக்கள் பெரும் அவதி

கொழும்பு, டிசெ. 10

நாடு முழுவதும் நேற்று மாலை ஏற் பட்ட திடீர் மின் தடை காரணமாக மக்கள் பெரும் அவதிக்கு உள்ளானார் கள். முன்னறிவிப்பு இன்றி சுமார் 8 மணித்தியாலங்களுக்கு மேல் ஏற்பட்ட மின்தடையால் நாடு முற்றாக இருளில் மூழ்கியது.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய சில பகுதிகளில் நேற்று இரவு மின் விநி யோகம் சீரானபோதும் பெரும்பாலான பகுதிகளில் நேற்று பின்னிரவு வரை மின்சாரம் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது.

15

# பிரபாகரனை சந்திக்க பல தடவைகள் முயன்ற மல்வத்து மகாநாயக்க தேரர்!

## உலக தமிழர் பேரவையின் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 10

யுத்த காலத்தில் மல் வத்து பீட மகாநாயக்க தேரர் ஆறு தடவைக்கு மேலாக தமிழீழ விடுத லைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை சந்திக்க இலங்கை அரசாங்கம் ஊடாக முயன்றதாகவும், ஆனால் அந்த விடயம் கைகூடவில்லை எனவும் தெரிவித்தார் என உலக தமிழர் பேர வையின் தலைவர்

15



# கோட்டாவை சந்திக்கமாட்டோம்!

கொழும்பு, டிசெ. 10

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நாட்டில் இடம்பெற்ற தமி ழருக்கெதிரான பல்வேறுபட்ட யுத்தக் குற்றங்களோடு தொடர்புபட்டவர். சர்வதேச சட்டதிட்டங்களை தட்டிக் கழித்தவர் என்பதனால் அவரை சந்திக்க விரும்பவில்லை என யாழ்ப்பா ணத்துக்கு விஜயம் மேற்கொண்ட உலக தமிழர் பேரவையினர்

15

# யாழ். ஆயரை சந்தித்த உலகத் தமிழர் பேரவை



யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள உல கத் தமிழர் பேரவையினர், யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசத்தை அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர். குறித்த சந்திப்பு தொடர்பில் உலக தமிழர் பேரவையின் பேச்சா ளர் தெரிவிக்கையில்-

யாழ். மறைமாவட்ட ஆயரை சந்தித்து, அவருக்கு நாங்கள் மேற்கொள்ள உள்ள வேலைத்திட்டம் தொடர் பில் விரிவாக விளங்கப்படுத்தினோம். எமது திட்டத் தினை நல்ல ஒரு திட்டம் இதை தான் வரவேற்பதாக தெரிவித்த ஆயர், மக்கள் மயப்படுத்தப்பட்ட திட்டத் தினை தாம் எப்போதும் வரவேற்போம், மேன்மேலும் இந்த விடயத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்து மாறு, ஆயர் எம்மிடம் கோரினார்-என்றார். (அ)

# புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குகின்றார் அர்ஜுன

## மல்வத்து, அஸ்கிரிய பீடாதிபதிகளையும் சந்தித்தார்

கொழும்பு, டிசெ. 10

புதிய அரசியல் கூட்டணியொன்றை உருவாக்க திட்டமிட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் அணி யின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரி வித்துள்ளார்.

ஊழல், மோசடியாளர்கள் இல்லாத புதிய அரசி யல் கூட்டணியை அமைக்கவே தாம் விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

15

# பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடத்த திட்டம்?

கொழும்பு, டிசெ. 10

பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடர் முடிந்த பின்னர், புதிய கூட்டத் தொடர் ஆரம்பமாகும் முன்னர் பாராளுமன்றத்தை கலைத்து,பொதுத் தேர் தலை நடத்தி, புதிய அரசாங்கத்தை அமைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அரசாங்கத் தின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்தில் தற்போது நடைபெற்று

15



# தலைநகரில் கைத்தொலைபேசி வெளிச்சத்தில் நூல் வெளியீடு!

கொழும்பு, டிசெ. 10

கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை மாலை புலோலியூர் ஆ. இரத்தின வேலோன் ‘அன்றலர்ந்த மலர்கள்’ நூல்வெளி யீட்டு நிகழ்வு தொடங்கிய சொற்ப நேரத்தில் மின்சாரம் தடைப்பட்டுவிட்டது.

15

# படகு சேவை தாமதத்துக்கு இந்திய தரப்பே காரணம்!

## அமைச்சர் நிமல் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 10

இந்திய தரப்பில் ஏற்பட்ட தாமதம் காரண மாகவே காங்கேசன்துறை மற்றும் இந்தியா இடையிலான படகு சேவை எதிர்பார்த்தபடி

15

# இப்படியும் நடக்கிறது

அவரைப்பற்றி பல தடவைகள் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருக்கின்றேன். அதனைப் படித்துவிட்டு பலரும் அப்போதெல்லாம் என்னை தொடர்புகொண்டு அது பற்றி விசாரித்தும் இருக்கிறார்கள்.

தமிழரசு கட்சியின் இளம் பாராளுமன்ற உறுப்பினரான தமிழரசின் முத்த தலைவர்களில் ஒருவரான காலஞ்சென்ற இராசமாணிக்கம் அவர்களின் பேரன், ராசபுத்திரன் சாணக்கிய அரசியலுக்கு வரவேண்டும் என்று விரும்பியதும், அவர் சரணடைந்த இடம் மகிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி.

இது நடந்தது, யுத்தம் முடிவடைந்த மறுவருடம். அதாவது இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு தேர்தலில் அவர் மகிந்தவின் அப்போதைய கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டார்.

அவரோடு அப்போது ஒரே பட்டியலில் போட்டியிட்டவர் முன்னாள் கிழக்கு மாகாண முதலைமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன்.

ஆனாலும் அவரால் அந்த தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை. இதனையடுத்து அரசியலில் ஒதுங்கிவிட்டதாக கூறிக்கொண்டு தனது பேரனார் இராசமாணிக்கம் பெயரில் சில பொது நலத்திட்டங்களுக்கு உதவிக்கொண்டு இருந்தவர், திடீரென்று கடந்த இருபதாம் ஆண்டு தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரானார்.

அவ்வாறு அங்கு நியமனம் பெறுவதற்காக அவர் கவனிக்க வேண்டியவர்களையெல்லாம் கவனித்ததாகவும் அப்போது பேசப்பட்டது.

அவர் தேர்தலில் வெற்றிபெற பல காரணங்கள் உண்டு. அவரது வசதி வாய்ப்புக்களும், அவர் இந்தப் பதவியையே குறிவைத்து, செய்த சமூக சேவைகளும் அவருக்கு உதவியிருக்கலாம்.

தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றம் சென்றதும், அவர் தனது கன்னிப்பேச்சில் தமிழ் சிங்களம் ஆங்கிலம் என்று மும்மொழிகளிலும் சரளமாகப் போசியதைப் பார்த்து நமது சமூகவலைத்தள போராளிகள் வாயைப்பிளந்து நின்றனர். அவர் சிங்களத்தில் பேசியது அவரது தாய்மொழியில் என்பது பலருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஆனால் அவரோ தனது தாயார் சிங்கள மொழியை தாய்மொழியாகக்கொண்டவர் என்பதை எதற்காக பொதுவெளியில் மறுத்துவந்தார் என்பதும் அவருக்கு மாத்திரமே வெளிச்சமானது.

ஆனால், அவர் பாராளுமன்றத்தில் பேசுகின்றபோது, தமிழில் ஒரு தமிழ் தேசியவாதிபோலவும், சிங்களத்தில் பேசுகின்றபோது ஒரு சிங்கள தேசியவாதிபோலவும் ஆங்கிலத்தில் பேசுகின்றபோது மேற்கத்தைய தேசியவாதிபோலவும் பேசுவதை மும்மொழிகளையும் அறிந்தவர்கள் மாத்திரமே புரிந்துகொள்ள முடியும்.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சு மீதான பட்ஜெட் விவாதத்தில் அவர் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க படையினர் இடைஞ்சல்கள் ஏற்படுவது குறித்து தமிழில் பேசியவர், பின்னர் சிங்களத்தில் பேசும்போது பனாகொடை இராணுவமுகாமில் படையினர் படுக்க கட்டில்கூட இல்லை என்றும்இ ராணுவ சிப்பாய்களுக்கு வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்றும் படையினருக்கான தனது விசுவாசத்தை வெளிப்படுத்தினார். இதுகுறித்தும் இந்தப் பத்தியில் அப்போது எழுதியிருந்தேன்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் அவர் தன்னை ஒரு விடுதலைப் புலியாக சிலர் நினைப்பதாகவும் அப்படி நினைப்பது தனக்கும் சந்தோசமானதுதான் என்றும் கூற, இதுவரை பொறுமையாக இருந்த சிங்கள எம்.பி.க்களில் ஒருவர் எழுந்து அவரை தோலுரித்துக்கட்டிவிட்டார்.

‘படித்தது சிங்களவர்களுடன், நீர் சாப்பிட்டது சிங்களவர்களுடைய வீட்டில், நீர் திருமணம் செய்யப்போவது சிங்களப் பெண்ணை... ஆனால் தமிழ் தேசியம் பேசுகிறீரா? தமிழ் தேசியப் கூட்டமைப்பில் உள்ள எம்.பி.க்களில் மற்றைய ஒன்பதுபோரும் வேண்டுமானால் தமிழ் தேசியம் பேசலாம். அதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கின்றது. அவர்கள் யுத்தம் நடந்தபோது அங்கே வாழ்ந்தவர்கள். ஆனால் நீர் மகிந்தவின் மடியில் இருந்து சுகபோகங்களை அனுபவித்தவர்...” என்று மகிந்த அணியில் அவருடன் கூடவே இருந்தவரான ராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் திசநாயக்க கூறியபோது, சாணக்கிய, சபாமண்டபத்திலிருந்து எழுந்துசென்றார்.

அப்போதும் அவர் விடவில்லை, ‘ஓர் ஆம்பிளையாக இருந்தால் அமர்ந்து இருந்து தனது பேச்சை கேட்குமாறு” கோரிக்கை விடுத்தார்.

சாணக்கியவின் (சாணக்கியனை ஏன் இப்படி சாணக்கிய என்று எழுதுகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். அவரது பாஸ்போர்ட்டில் அவரது பெயர் சாணக்கிய என்றுதான் இருக்கின்றது) நோக்கம் என்ன என்பது நாம் புரிந்துகொள்ளக்கூடியதுதான்.

தன்னை ஒரு சிங்கள தேசியவாதியாக காட்டிக்கொள்ளவும், சிங்கள மக்கள் மத்தியில் தனக்கென்று ஓர் அரசியல் இடத்தை பெற்றுவிடுவதற்காகவும் அவர் முயற்சி செய்வது தவறானது இல்லைத்தான். எதிர்காலத்தில் தனக்கு நன்கு பரிச்சயமான கண்டியில் போட்டியிட்டாலும் சிங்கள மக்களின் வாக்குகளில் வெற்றிபெறலாம் என்று அவர் நினைப்பதும் தவறானது இல்லையே.

ஆனால் அவர் எதற்காக இப்படிச் செய்கிறார் என்பதை புரிந்துகொண்டுவிட்டதால்தானோ என்னவே இப்போது அவருக்கு எதிராக சிங்கள தலைவர்கள் குரல் கொடுக்கவும் இவரின் இரட்டை வேடத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவரவும் தொடங்கியிருக்கின்றனர்.

**- ஊர்க்குருவி.**

# மன்னாரில் ஏற்படவுள்ள மிகப்பெரும் அழிவில் அரசு சம்பந்தப்படுகின்றதா?

## மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் கேள்வி

மன்னார், டிசெ. 10

மன்னார் தீவில் ஏற்படவுள்ள மிகப் பெரிய அழிவுக்கு அரசு சம்பந்தப்படுகிறதா என்கின்ற சந்தேகம் மக்கள் மத்தியிலும், எங்கள் மத்தியிலும் எழுந்துள்ளது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் தீவு பல்வேறு பிரச்னைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. அவற்றில் முக்கியமாக பாரிய மண் அகழ்வுத் திட்டம் மற்றும் எல்லை மீறிய காற்றாலைக் கோபுரங்கள் மற்றும் காடழிப்பு போன்றவை காணப்படுகின்றன.

எனினும், மண் அகழ்வு தொடர்பாக பல்வேறு விடயங்களை முன்வைக்க விரும்புகின்றோம். மண் அகழ்வில் ஈடுபடுகின்ற தொழிற்சாலைகள் சம்பந்தமாக விழிப்புணர்வுகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிவதற்காக அரச தரப்பில் பல்வேறு முயற்சிகளை கடந்த வருடம் நாங்கள் மேற்கொண்டுள்ளோம். ஆனால், அரச தரப்பிடம் இருந்து இதுவரை எந்த விதமான பதில்களும் எமக்கு கிடைக்கவில்லை.

பல ஆண்டுகளாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் இவ்விடயம் தொடர்பாக வினவியபோதும், விளக்கம் கோரியபோதும் எவ்வித பதிலும் எமக்கு கிடைக்கவில்லை.

மேலும், மன்னார் பிரதேச செயலகத்திடமும் நாங்கள் பல்வேறு விதமான விளக்கங்களை கேட்டிருந்தபோதும் எவ்வித பதிலும் எமக்கு வழங்கப்படவில்லை.

இவ்விடயம் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாக நாங்கள் தகவல்களை பெற்றுக்கொள்ள அரசை நாடினோம். விளக்கம் கோரி பல்வேறு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டது. ஆனால், இதுவரை அனுப்பப்பட்ட விண்ணப்பங்களுக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

மிகப் பெரிய அழிவுக்கு அரசும் சம்பந்தப்படுகிறதா என்கின்ற சந்தேகம் மக்கள் மத்தியிலும், எங்கள் மத்தியிலும் எழுந்துள்ளது. அவற்றை தெளிவாக நாங்கள் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

29.12.2021 அன்று தகவல் அறியும் சட்டத்தின் கீழ் இதற்காக விளக்கம் கேட்டு, நாங்கள் எழுதியிருந்தோம். அதற்கான பதிலை 10.01.2022 அன்று வழங்கியிருந்தார்கள். கோரிய விளக்கங்களை வழங்குவதாக தெரிவித்திருந்தனர். ஆனால், எவ்வித பதிலும் இல்லை.

தொடர்ந்தும் பல தடவைகள் விளக்கம் கோரி கடிதம் எழுதியிருந்தோம். எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இவ்வாறான நடவடிக்கைகள் எமக்கு கவலையளிக்கின்றன. மன்னாரை மிகவும் ஆபத்தான நிலைக்கு கொண்டு செல்கின்றனர்.

அரசிடம் பல்வேறு முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டுள்ளபோதும் அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துகிறோம் - என்றார். (அ)

# பெருந்தோட்ட மக்களுக்கு 2,000 ரூபா நாளாந்த கொடுப்பனவு வழங்கவேண்டும்

## மைத்திரிபால சிறிசேன கோரிக்கை

கொழும்பு, டிசெ. 10

சடுதியான வாழ்க்கை செலவு அதிகரிப்புக்கு மத்தியில் பெருந்தோட்ட மக்களுக்கு 1000 ரூபா சம்பளம் என்பது சாத்தியமற்றது. நாளாந்த சம்பளம் 2000 ரூபாவாக வழங்கப்பட வேண்டும். உரம் தொடர்பில் கடந்த அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானத்தால் ஏற்பட்ட விளைவுகளை குறுகிய காலத்துக்குள் சீரமைக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் விவசாயத்துறை மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். நெற்பயிர்ச்செய்கை உட்பட மரக்கறி, பழ வகை பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் உர பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

புதிய வரிக் கொள்கையில் விவசாய உபகரணங்களை உள்ளடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமானால், உற்பத்தி செலவுகளை குறைக்க வேண்டும். ஆகவே விவசாய பொருட்களுக்கு வற் வரி விதிப்பை தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

கடந்த அரசாங்கம் விவசாயத்துறை தொடர்பில் எடுத்த தவறான மூர்க்கத்தனமான தீர்மானத்தால் ஒட்டுமொத்த விவசாயத் துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட விளைவுகளை குறுகிய காலத்துக்குள் சீர்படுத்த முடியாது. உர பற்றாக்குறையால் பெருந்தோட்டத் தொழிற்றுறை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்பினால் பெருந்தோட்ட மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். தற்போதைய வாழ்க்கை செலவுகளுக்கு மத்தியில் 1000 ரூபா சம்பளம் சாத்தியமற்றது. ஆகவே தோட்ட தொழிலாளர்களுக்கு ஒரு நாள் சம்பளமாக 2000 ரூபா வழங்க வேண்டும்-என்றார். (அ)

# வாள், கத்தி தேடும் பொலிஸார்!

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாணத்தில் வாள் மற்றும் நீளமான கத்திகளை தயாரிக்கும் இடங்களை தேடும் விசேட சுற்றிவளைப்புகள் தீவிரமாக நடத்தப்படும் என யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலத்தில் இடம்பெற்று வரும் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் கூலிக்கு வன் முறையில் ஈடுபடும் கும்பல்களுக்கு இடமளிக்க முடியாது என யாழ்ப் பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்.

யாழில் அண்மைக்காலமாக வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

# சஜித் பதவி விலகவேண்டும்!

## மஹிந்தானந்த மீண்டும் வலியுறுத்து



கொழும்பு, டிசெ. 10

**"எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிய ஆதாரங்களை நான் முன்வைத்துவிட்டேன். எனவே, அவர் உடன் பதவி விலகவேண்டும்." _ என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் கூறியவை வருமாறு,

"கலாசார நிதியத்தின் நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டது என நான் சுட்டிக்காட்டியிருந்தேன். நிர்வாக சபையின் அனுமதி இன்றி 10 பில்லியன் ரூபா முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது. விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

மூவரடங்கிய நீதிபதிகள் குழு வழங்கிய ஆவணத்தில் கையொப்பம் இல்லை என எதிர்க்கட்சி தலைவர் கூறினார். ஆனால் கையொப்பம் உள்ளது. அதனை நான் சபையில் முன்வைக்கின்றேன். மூவரின் கையொப்பங்களும் உள்ளன.

சஜித் பிரேமதாசவின் மனைவியின் சலூனில் வேலை செய்வதற்கு, அரச பொறியியல் கூட்டுதாபனத்தில் இருந்து ஊழியர்களை எடுத்துள்ளனர். அவர்களுக்கு அரச சம்பளமே சென்றுள்ளது. உள்ளக கணக்காய்வு அறிக்கையில் இவ்விடயம் தெரியவந்துள்ளது. எனவே, எதிர்க்கட்சி தலைவர் பதவி விலக வேண்டும்.- என்றார். (அ)

# பள்ளிவாசல் காவலாளி தாக்கப்பட்டு கொலை!

கொழும்பு, டிசெ. 10

ஹற்றன் ஜூம்மா பள்ளிவாசலின் காவலாளிமீது நேற்று அதிகாலை நடத்தப்பட்டுள்ள தாக்குதலில் அவர் பலியாகியுள்ளார். அத்துடன், பள்ளிவாசலில் இருந்த உண்டியலும் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளது.

ஹற்றன் ஜூம்மா பள்ளிவாசலில் சுமார் இரு வருடங்களாக காவலாளியாக பணியாற்றி வரும் ஹற்றன், ஹிஜிரபுர பகுதியைச் சேர்ந்த சி.எம். இப்ராஹிம் (வயது - 67) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

அவரின் தலைப்பகுதியிலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

" அதிகாலை ஒரு மணியளவில் சுவர் ஏறி குதித்து பள்ளிவாசலுக்கு வந்த நபரொருவர், காவலாளியின் ஓய்வறைக்கு சென்றுள்ளார். பின்னர் வெளியே வந்து உண்டியலை உடைத்து பணத்தை எடுத்துச் சென்றுள்ளார்." ஹற்றன் பள்ளிவாசலின் நிர்வாக சபை தெரிவித்துள்ளது.

பள்ளிவாசலின் உண்டியல் பல தடவைகள் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளதாகவும், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றாமல் இருப்பதற்காகவே காவலாளி நியமிக்கப்பட்டார் என்று கூறியுள்ளனர்.

நபர் பள்ளிக்குள் வருவது, உண்டியலை உடைப்பது போன்ற காட்சிகள் சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது. ஸ்தல பரிசோதனையின் பின்னர் உயிரிழந்தவரின் சடலம், பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா வைத்தியசாலைக்கு அனுப்பட்டது.

கொலையாளியை கைது செய்வதற்கான விசாரணை, தேடுதல் வேட்டையில் ஹற்றன் பொலிஸார் இறங்கியுள்ளனர். (அ)

# இலஞ்சம் பெற்றனர் என கைது செய்யப்பட்ட 2 முன்னாள் எம்.பிக்கள் பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, டிசெ. 10

இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அனுருத்த பொல்கம்பல மற்றும் டெனிசன் பொன்சேகா ஆகியோர் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் 25 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக ஒரு கோடி ரூபாவை இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மற்றுமொரு சந்தேக நபரான மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முன்னாள் தலைவர் சுபுன்.எஸ். பத்திரகே முன்னதாக பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காலியில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, டிசெ. 10

காலி - தல்பே பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தங்களை பொலிஸார் என்று அடையாளப்படுத்தி கொண்ட குழுவொன்று குறித்த நபரை மாத்தறையில் இருந்து காலி - தல்பே வரை கடத்தி சென்றதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பின்னர் குறித்த குழுவினர் அந்த நபர் மீது துப்பாக்கி சூட்டை நடத்தி விட்டு, அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

துப்பாக்கி சூட்டில் காயமடைந்த 30 வயதான நபர் தற்போது கராப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# 97 வகையான பொருட்களுக்கு வற்!

கொழும்பு, டிசெ. 10

இதுவரை வற் வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டிருந்த 138 வகையான பொருட்களில் 97 வகையான பொருட்களுக்கு அதனை விதிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன சமர்ப்பித்த பிரேரணை மீதான விவாதத்திற்கு சபை ஒத்திவைப்பு வேளையில் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு குறிப்பிட்டார்.

'பல வற் விலக்குகள் வழங்கப்படுவதால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 சதவீதத்திற்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இதை பெற வேண்டும். அதனால்தான் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள 138 பொருட்களில் 97 பொருட்களுக்கு வரி விலக்கை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 சதவீத வருமான அதிகரிப்பு அதாவது 378 பில்லியன் ரூபா வருமானம் பெற முடியும் என கணக்கிடப்பட்டுள்ளது. இது நாட்டின் தேவை" என அவர் மேலும் கூறினார். (அ)

# விமான நிலையத்தில் சிக்கியது ரூ.10 கோடி பெறுமதியான குஷ்

கொழும்பு, டிசெ. 10

கட்டுநாயக்க விமான நிலையத்தில் மறந்து விட்டு சென்ற பயணப் பொதியில் 10 கோடி ரூபாய் பெறுமதியான குஷ் போதைப்பொருள் இருந்ததை விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கனடாவில் இருந்து கடந்த நவம்பர் 14 ஆம் திகதி பிற்பகல் 02.40 மணியளவில் டுபாய்க்கு கொண்டு வந்து அங்கிருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பான தகவல் மேல்மாகாண புலனாய்வு தகவல் பிரிவு அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டதுடன் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகபூர்வ நாய்களும் இந்த விசாரணையில் ஈடுபடுத்தப்பட்டது.

இந்த பயணப் பொதிகளில் 19 கிலோ 588 கிராம் குஷ் போதை பொருள் இருந்ததாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் கைப்பற்றப்பட்டபோது, விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் வந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த குஷ் போதை பொருள் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

அத்துடன் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மத்ரஸா மாணவன் மர்ம கொலை; மௌலவிக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 10

மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பில் கைதான மௌலவியை எதிர்வரும் டிசம்பர் மாதம் 21 திகதி வரை வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் சம்சுதீன் முன்னிலையில் விசார ணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸாரின் நீண்ட சமர்ப்பணங்கள் உட்பட ஏனைய விடயங்களை ஆராய்ந்த நீதிவான் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட் டார்.

சுமார் 4மணித்தியாலங்கள் வாக்குமூலங்களை வழங்கிய மௌலவி இறுதியாக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரியிடம் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு உடற்பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்

சந்தேக நபராக மௌலவியின் சார்பாக எந்தவொரு சட்டத்தரணிகளும் முன்னிலையாகவில்லை. சந்தேக நபரான மௌலவியின் வாக்கு மூலங்களை பெற்ற பொலிஸார் சிசிரிவி கமெராக் களை பொருத்தியவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அட்டாளைச்சேனையில் மறைந்திருந்த சிசிரிவி கமெரா பொருத்திய நபர் மற்றும் அவரது உதவியாளர்கள் 3 பேரை பொலிஸ் நிலையத்திற்கு வரவழைத்து கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது தனித்தனியாக அவர்கள் ஒவ்வொருவரிடமும் வாக்குமூலங்களை பெற்ற பொலிஸார் காணாமல்போன முக்கிய ஆதாரங்களை அழிக்கப்பட்ட நிலையில் வன்பொருள் சேமிப்பகத்தை கைப்பற்றி நீதிமன்ற சான்று பொருளாக மன்றில் ஒப்படைத்ததுடன் அரச பகுப்பாய்விற்காக அழிக்கப்பட்ட காணொளிகளை மீளவும் பெற்றுக்கொள்வதற்கு மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# முட்டை விலை அதிகரிப்பு



கொழும்பு, டிசெ. 10

பண்டிகை காலத்தை முன்னிட்டு முட்டை விலை அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 42 முதல் 45 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட வெள்ளை முட்டை ஒன்றின் விலை தற்போது 47 முதல் 50 ரூபாவை தாண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிவப்பு நிற முட்டை ஒன்று 53 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் முட்டை விலை அதிகரிப்பது வழமை என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் பொருளாளர் விஜய அல்விஸ் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டை விலை அதிகரிக்கப்படாது என முட்டை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ஆர்.எம். சரத் ரத்நாயக்க முன்னதாக தெரிவித்தார். (அ)

# வாஸ்துவின் பெயரால் வீட்டுக்குள் நுழைந்துள்ளது ஆகாயத் தாமரை

## மூடநம்பிக்கை பெரும் சூழற்பேரழிவுகளை ஏற்படுத்தும் என்கிறார் பொ. ஐங்கரநேசன்



யாழ்ப்பாணம், டிசெ. 10

**அதிர்ஷ்ட மூங்கிலத்தைத் தொடர்ந்து வாஸ்துவின் பெயரால் இப்போது ஆகாயத் தாமரை வீடுகளுக்குள் நுழைய ஆரம்பித்துள்ளது. அந்நிய நீர்க்களையான ஆகாயத் தாமரையை அதிர்ஷ்டம் தரும் தாவரமாகப் பலரும் வீடுகளில் நீர்த்தொட்டிகளில் வளர்க்க ஆரம்பித்துள்ளார்கள். பூச்செடிகள் விற்பனையாளர்களும் பின்விளைவுகளை அறியாது இதனை விற்பனை செய்யத்தொடங்கி உள்ளார்கள். இந்தப்போக்கு மிகவும் ஆபத்தானது. மூடநம்பிக்கை சூழற்பேரழிவுகளை ஏற்படுத்தும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.**

ஆகாயத் தாமரை வீடுகளில் வளர்க்கப்படுவது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயற்கை எந்த உயிரியையுமே தேவையற்றுப் படைப்பதில்லை. ஒவ்வொரு உயிரியும் முக்கியத்துவம் மிக்கவை. அவை பரிணாமிக்கும் சூழலின் சமநிலையில் இன்றியமையாத பங்களிப்பை நல்கி வருகின்றன. ஆனால், அவை இயற்கையாகத் தோன்றிய பிரதேசத்தில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றப்படும்போது அவற்றுள் சில இனங்கள் ஆக்கிரமிப்பு இனங்கள் ஆகிவிடுகின்றன. புதிய சூழலின் சமநிலையைக் குழப்பிச் சரிசெய்யமுடியாத அளவுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. உலகின் உயிர்ப்பல்வகைமையை அழித்து வரும் பிரதான காரணிகளில் ஒன்றாக இவ்வந்நிய ஊடுருவல் இனங்கள் உள்ளன. அத்தகைய ஓர் அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரமே ஆகாயத்தாமரை ஆகும்.

ஆகாயத் தாமரை தென் அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட ஒரு அசுர நீர்க்களை. நீரே தெரியாத அளவுக்கு விரைந்து மூடிவளரும் ஆற்றல் பெற்றவை. இதனால், நீர்ச்சூழற்றொகுதியில் ஏனைய உயிரினங்களின் வளர்ச்சியைப் பாதிப்பதோடு, நுளம்புகளின் பெருக்கத்துக்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன. குளங்களில் இருந்து தப்பிச்செல்லும் இக்களை வயல் நிலங்களில் பல்கிப் பெருகி நெல் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. இதனால், இலங்கை அரசாங்கம் ஆகாயத் தாமரையை அந்நிய ஊடுருவல் ஆக்கிரமிப்பு இனமாகக் கருதி அழிக்கத் தலைப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆரியகுளத்திலிருந்து இதனை முற்றாக அகற்றுவதற்கு மிகப் பெருந்தொகைப் பணமும் பெருங்காலமும் எடுத்தது என்பது நினைவிற் கொள்ளத்தக்கது. இன்னும் ஏராளமான குளங்கள் ஆகாயத் தாமரையின் ஆக்கிரமிப்புக்குள் திணறிக் கொண்டிருக்கும் நிலையில் அதிர்ஷ்ட தேவதை என்ற அந்தஸ்தை வழங்குவது அதற்கு அசுரப் பலத்தைப் பெற்றுக் கொடுத்துவிடும். வீடுகளிலிருந்து தவறுதலாக வெளியேறும் இதன் சிறு அரும்பே அதன் பல்கிப்பெருகும் ஆற்றலால் சூழலை அதன் ஆக்கிரமிப்பின்கீழ் விரைந்து கொண்டுவந்துவிடும். ஏற்கனவே பார்த்தீனியம், சீமைக் கருவேலம், இப்பில்இப்பில் போன்ற அந்நியன்களால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் எம் நிலம் ஆகாயத் தாமரையினாலும் வலிகளைச் சுமக்க நேரிடும். எமது விவசாயத் திணைக்களம் ஆகாயத் தாமரை தொடர்பான விழிப்புணர்வைச் சமூகத்தின் சகல மட்டங்களிலும் ஏற்படுத்த முன்வரவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# இளைஞனை தாக்கி நகைகள் கொள்ளை!

## கொடிகாமத்தில் மூவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பகுதியில் இளைஞனை தாக்கி அவரது வீடு புகுந்து சேதப்படுத்தி நகை, பணம கொள்ளையிட்டு சென்ற சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் விசாரணைகளுக்கு பின்னர் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்தபட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளாம்போக்கட்டி பகுதியில் கடந்த புதன்கிழமை வீதியால் சென்ற இளைஞன் மீது வன்முறைக் குழுவொன்று தாக்குதல் நடத்தியதுடன், குறித்த இளைஞனின் வீட்டிற் குச் சென்று பெறுமதியான உடைமைகளை அடித்து நொருக்கியதுடன் வீட்டில் இருந்த நகை,பணம் போன்ற பெறுமதியான பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

காயப்பட்ட இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனவரி மாதம் மீண்டும் மின் கட்டண திருத்தம்

கொழும்பு, டிசெ. 10

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச மின்சார சட்டமூலம் எதிர்வரும் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

குறித்த சட்டமூலத்தில் காணப்படும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, அதனை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

உத்தேச மின்சார சட்டமூலத்தில் 42 அச்சுப்பிழைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த தவறுகள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

இதனிடையே, எதிர்வரும் ஜனவரி மாதத்தில் மீண்டும் மின் கட்டண திருத்தத்தை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்தார்.

நீர் மின்னுற்பத்தி அதிகரித்துள்ளமையை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# கராப்பிட்டியவில் மண்மேடு சரிந்து வீழ்ந்து ஒருவர் பலி!

கொழும்பு, டிசெ. 10

காலி - கராப்பிட்டிய பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மண்மேட்டுக்குள் சிக்கியிருந்த மேலும் இருவர் மீட்கப்பட்டு கராப்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காலி மாவட்ட இடர் முகாமைத்துவ உதவி பணிப்பாளர் கேர்ணல் ரவீந்திர லியனகே தெரிவித்தார்.

இவர்களில் ஒருவரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளதாக அவர் கூறினார்.

மதில் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்த போது நேற்று பகல் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இராணுவத்தினரும் பிரதேச மக்களும் ஒன்றிணைந்து பெக்கோ இயந்திரம் மூலம் மண்மேட்டிற்குள் சிக்கியிருந்தவர்களை மீட்டதாக காலி மாவட்ட இடர் முகாமைத்துவ உதவி பணிப்பாளர் கேர்ணல் ரவீந்திர லியனகே தெரிவித்தார். வல்பொல பகுதியை சேர்ந்த 35 வயதான ஒருவரே உயிரிழந் துள்ளார். (அ)

# கரையோரபும் சுவீகரிப்புக்கு எதிராக இன்று பொன்னாலையில் போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாணம் - அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தையும் பொன்னாலை துருத்திப்பிட்டியையும் சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் முயற்சி எடுத்துள்ள நிலையில் அதைக் கைவிடுமாறு வலியுறுத்தி பொன்னாலைச் சந்தியில் கடற்றொழிலாளர்களும் பொது மக்களும் இணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

பொன்னாலை சந்தியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணியளவில் முன்னெடுக்கப்படவுள்ள இப் போராட்டத்திற்கு பொன்னாலை தொடக்கம் அராலி வரையுள்ள கடற்றொழிலாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வெளியுறவு அமைச்சர் கட்டாருக்கு!

கொழும்பு, டிசெ. 10

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை கட்டாருக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

டோஹா மன்ற மாநாட்டில் பங்கேற்பதற்காக குறித்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

டோஹா போரம் என்பது கட்டார் மாநிலத்தால் நிதியுதவி செய்யப்படும் உலகளாவிய மன்றமாகும்.

உலகம் எதிர்கொள்ளும் முக்கியமான சவால்களைப் பற்றி விவாதிக்க ஒரு செயல் திட்டத்தை உருவாக்க தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது வெளிவிவகார அமைச்சர் கட்டார் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சர்வதேச நாணய நிதியத்துடன் செவ்வாயன்று கலந்துரையாடல்

கொழும்பு, டிசெ. 10

எதிர்வரும் 12 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்துடன் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

கலந்துரையாடலின் பின்னர் இரண்டாம் தவணை கடனை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பிற்குப் பின்னர், நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விடும் என்பதை உலகிற்கு அறிவிக்க முடியும் எனவும் நாட்டை நெருக்கடி நிலையிலிருந்து மீட்டெடுக்க அரசாங்கம் கட்டம் கட்டமாக நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு புதிய முதலீட்டாளர்கள் தேவை எனும் அடிப்படையில், அதற்கான வேலைத் திட்டத்தை தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில், தற்போதுள்ள பொருளாதார நிலையில் இருந்து நாட்டை மேலும் மேம்படுத்த முடியும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 2,75,000 இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாகவும் அவர்களில் 85 வீதம் பேர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ)

ஈழநாடு
Eelanadu
10.12.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உலகத் தமிழர் பேரவை என்ன செய்ய முயற்சிக்கின்றது?

தமிழ் புலம்பெயர் குழுவொன்று பௌத்த பிக்குகள் குழுவுடன் இணைந்து சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. முதல் தடவையாக பௌத்த மதபீடங்களை சந்தித்திருக்கின்றது. பௌத்த மதபீடங்களை சந்திப்பதும், தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடுவதும் தவறான விடயங்கள் அல்ல – ஆனால், இவற்றின் மூலம் எதை சாதிக்க முற்படுகின்றனர் என்பதே முக்கியமானது.

உலகத் தமிழர் பேரவை புலம்பெயர் சூழலில் செல்வாக்கு மிக்க அமைப்பு அல்ல – ஒப்பீட்டடிப்படையில் ஏனைய அமைப்புகளோடு ஒப்பிட்டால், மிகவும் குறைவான உறுப்பினர்களையும், குறைவான மக்கள் தொடர்புகளையுமே கொண்டிருக்கின்றது – எனினும் தனிப்பட்ட சில தொடர்புகளின் வழியாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தோடு தொடர்புகளை பேணிவருகின்றது. அரசியல்ரீதியில், உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள், இலங்கை தமிழரசுக் கட்சியுடன் – குறிப்பாக அதன் பேச்சாளரும் வெளிவிவகாரங்களை கையாளுபவருமான எம்.ஏ.சுமந்திரனோடு நெருக்கமானவர்களாக தங்களை வெளிக்காட்டியவர்கள். தமிழரசு கட்சிக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை ஏனைய கட்சிகளுக்கு – குறிப்பாக ரெலோ, டி.பி.எல்.எப் (புளொட்), ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியவற்றுக்கு வழங்கியதாக சான்றில்லை. மேற்படி கட்சிகள், ஒப்பீட்டடிப்படையில், மேற்குலகத்தை விடவும், இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருக்கும் கட்சிகள் என்பது இரகசியமானதல்ல.

உலகத் தமிழ் பேரவையின் கடந்த கால செயல்பாடுகளை, இந்த அடிப்படையில்தான் புரிந்துகொள்ள முடியும். ஆனால், தற்போது, முற்றிலும் மாறுபட்ட முகத்துடன் அவர்களது இலங்கை விஜயம் இடம்பெற்றுள்ளது. அரசியல்வாதிகளை விடுத்து, மக்களுக்கும் மக்களுக்குமான ஊடாட்டத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் தாங்கள் ஈடுபடவுள்ளதாக கூறுகின்றனர். அந்த அடிப்படையில் பௌத்த பிக்குகளுடன் இணைந்து, ஒரு பிரகடனத்தையும் வெளியிட்டிருக்கின்றனர். யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் – யுத்தத்திற்கு பின்னரான காலத்திலும், சிங்கள – தமிழ் மக்கள் மத்தியில் சகவாழ்வு மற்றும் சமாதானம் என்னும் சொற்களுடன் பலவாறான அரசுசாரா நிறுவன செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவ்வாறான செயல்பாடுகள் எவையும் வெற்றியளிக்கவில்லை. சுருக்கமாக கூறுவதனால், அரசியலுக்கு முன்னால் அவற்றால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. சிங்கள மேலாதிக்க அரசியல் அனைத்தையும் விழுங்கிவிட்டது.

சிங்கள மேலாதிக்க அரசியல் என்பது – அடிப்படையில் சிங்கள – பௌத்த மேலாதிக்க மனோநிலையுடன் பின்னிப்பிணைந்திருக்கின்றது. பௌத்த மேலாதிக்கமே, இன்று வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும், பிரதான விடயமாகும். தமிழ் மக்களின் வாழ்விடங்களில் விகாரைகளை நிறுவ முயற்சிப்பதும் – அதனால் ஏற்படும் இன முறுகல் நிலையும் தொடர்கின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான், உலகத் தமிழர் பேரவை, பௌத்த பிக்குகளுடன், வடக்கு, கிழக்கிற்கு வந்து, கலந்துரையாடல்களை முன்னெடுக்கின்றது. அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகள் சமாதானத்தின் மீது, பெரும் ஈடுபாட்டைக் காண்பித்ததாக, உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதி கூறுகின்றார். அவ்வாறாயின் எதிர்காலத்தில் வடக்கு கிழக்கில் எந்தவொரு விகாரைகளும் நிறுவப்படாது என்னும் முடிவுக்கு நாம் வர முடியுமா? அதற்கான உறுதிமொழியை உலகத் தமிழர் பேரவை பெற்றிருக்கின்றதா? சமாதானத்தின் எல்லை என்பது – சிங்கள மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டு பணிந்து செல்வதா? அவ்வாறானதொரு சமாதானம் அல்ல தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது?

அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறினார். அதனை முதலில் எதிர்த்தவர்கள் பௌத்த பிக்குகள்தான். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரதியை தீயிட்டு கொழுத்தி, தங்களின் தமிழர் விரோதத்தை வெளிப்படுத்தியவர்கள் பௌத்த பிக்குகள்தான். அதன் பின்னர்தான், சரத்வீரசேகர, உதய கம்பன்பில போன்ற இனவாதிகள் வெளியில் வந்தார்கள். நிலைமை இவ்வாறிருக்கின்ற போது, நாங்கள் சமாதானத்தை விரும்புகின்றோம் என்று பௌத்தமத பீடாதிபதிகள் கூறுவதும் – அதனை கேள்விகளின்றி, உலகத் தமிழர் பேரவையினர் தமிழ் மக்களுக்கு முன்னால் ஒப்புவிப்பதும் சரியான அணுகுமுறைதானா? இது தொடர்பில், உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் ஒன்றுக்கு இரண்டு முறை சிந்திக்க வேண்டும். மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு கூட, இந்திய பிரதமரிடம் செல்ல வேண்டிய நிலையிலேயே தமிழ் கட்சிகள் இருக்கின்றன.

# அடுத்த சீன கப்பலுக்கு அனுமதி வழங்கவில்லை

## அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

*கொழும்பு, டிசெ. 10*

*இலங்கைக்கு எதிர்காலத்தில் விஜயம் மேற்கொள்ளும் கப்பல்கள் குறித்து இலங்கை அரசாங்கம் மேலதிக தகவல்களை கோரும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.*

*எதிர்காலத்தில் கப்பல்களுக்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் மேலும் பல தகவல்களை கோருவது என தீர்மானித்துள்ளோம் என அமைச்சர் மேலும் கூறினார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*ஆராய்ச்சி கப்பல்கள் உட்பட அனைத்து கப்பல்களுக்கும் நாங்கள் நிலையான செயற்பாட்டு நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளோம். கடந்த பத்து வருடங்களில் இலங்கைக்கு கப்பல்களை அனுப்பிய நாடுகளுக்கு இவற்றை வழங்கியுள்ளோம்.*

*ஆகவே அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடன் இடம்பெறுகின்றன. நிலையான செயற்பாட்டு நடைமுறையை நாங்கள் அடிப்படையாக கருதுகின்றோம். மூன்றாவது கப்பலுக்கான அனுமதி உள்ளூர் சகா ஒருவர் இல்லாமல் விடுக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி நடைபெறும் இடங்களை சீனாவே தீர்மானிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் நாங்கள் அனுமதி வழங்கவில்லை-என்றார்.*

*(அ)*

# புத்தளம் களப்பில் மறைத்து வைக்கப்பட்ட 4 கிலோ தங்கம் கடற்படையினரால் மீட்பு!

*கொழும்பு, டிசெ. 10*

*புத்தளம் களப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 கிலோகிராமிற்கும் அதிக தங்கம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*புத்தளம் களப்பு, பத்தலங்குண்டு தீவுக்கருகில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.*

*கற்பிட்டியை சேர்ந்த 27 மற்றும் 35 வயதான இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*சந்தேகநபர்கள் இருவரும் கைப்பற்றப்பட்ட தங்கத்துடன் சுங்கப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)*

# 1877 கடற்படையினருக்கு பதவி உயர்வு

*கொழும்பு, டிசெ. 10*

*இலங்கை கடற்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு தரங்களை சேர்ந்த 1877 சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட கடற்படை வீரர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.*

*கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பரிந்துரைக்கமைய, இந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.*

*இதனிடையே, இலங்கைக் கடற்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவு நேற்று கொண்டாடப்பட் டது.*

# வேலைவாய்ப்பு தருவதாக 165 இலட்சம் ரூபா மோசடி

## பெண் ஒருவர் கைது

*கொழும்பு, டிசெ. 10*

*தென் கொரியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 165 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை மோசடி செய்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கந்தானையிலேயே அவர் கைது செய்யப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்தது.*

*தென் கொரியாவில் வெல்டிங் பிரிவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி, அவர் நாட்டின் பல பகுதிகளிலும் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.*

*44 வயதான குறித்த பெண், 5 இலட்சம் ரூபா முதல் 20 இலட்சம் ரூபா வரை ஒவ்வொருவரிடமும் மோசடி செய்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.*

*இந்த சம்பவங்கள் தொடர்பில் சுமார் 15 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பணியகம் கூறியுள்ளது.*

*சந்தேகநபரை நீர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -107

# முடிவுறா அத்தியாயம் : யோகமும் சோகமும்

- கணபதி சர்வானந்தா

கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் மூத்த பேராசிரியர் திரு.செ.யோகராசா அவர்கள் கொழும்பில் 07.12.23 அன்று காலமாகிய செய்தி தமிழ் உலகை ஆழந்த துயரத்தில் ஆழ்த்தியிருக் கிறது. கடந்த இரண்டு தினங்கள் சமூக ஊடகங்களை நிரம்பிய செய்தியும் அதுவே. தமிழ் இலக்கியத்தின் தகவல் பெட்டகமாகத் திகழ்ந்த பேராசிரியருக்கு எமது அஞ்சலிகள்.

அவர் பற்றி மல்லியப்புச் சந்தி திலகரின் பகிர்வு இது.

இரண்டு கைகளும் கால்களும் அசைக்க முடியாத அளவு வீங்கி இருந்தன. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அவர் அருகில் நாங் கள் நிற்பதை அவர் உணர்ந்திருக்க வேண்டும். இலேசாக கண் விழித்தார். மாஸ்க் அணிந்திருந்த அவரது முகத்தில் கண்களை மட்டுமே எங்களுக்கு தெரிந்தது. ஆனால் அவரது கண்களில் நாங் கள் முழுமையாக தெரிந்து இருக்க வேண்டும். அவர் புன்னகைக் கிறார் என்பது புரிந்தது. அவரைக் கவனித்துக் கொள்ளவென அருகில் நின்ற அந்த சகோதரனிடம் கேட்கிறார்:

“நான் பேசலாம் தானே”

“பேசலாம் Sir, கையை மட்டும் அசைத்து விடாதீர்கள்”

“மலைகளை வரைதல்’ மட்டக்களப்பு அறிமுகக் கூட்டத்துக்கு பிறகு இன்றைக்குத்தான் நாம சந்திக்கிறோம், எப்படி இருக்கீங்க திலகர்” இப்படித்தான் உரையாடலை ஆரம்பித்தார்.

“நாங்க நல்லம் ளுசை. உங்களது உடல் நலம் பார்க்க வந் தோம். நம்பிக்கையோடு இருங்கள். நீங்கள் மீண்டு வருவீர்கள்”

“ அது ஒன்றும் பிரச்சினை இல்லை. இந்தியாவில இருந்து ஒரு ரிப்போர்ட் வர இருக்கு அது வந்தும் சரி. நான் வீட்ட போயிடலாம். ‘மலைகளை வரைதல்’ இரண்டாம் பாகம் கொண்டு வந்திட்டீங்களே “உடல் வருத்தங்களை ஒரு புறம் வைத்து விட்டு மீண்டும் இலக்கிய பக்கமே திரும்பினார். நானே மறந்துவிட்ட ‘மலைகளை வரைதல்’ பாகம் 2 குறித்து அவர் இந்த நிலையிலும் நினைவில் வைத்து இருந்தது என்னை வியப்பில் ஆழ்த்தியது. அவருக்கு மருந்து அதுதான் என புரிந்து கொண்டு அவரது பேச்சுக்கு செவிசாய்த்தேன். பலரதும் எழுத்துக்கள் தொடர்பான அவரது ஆய்வுகள் ஞாபகங்களாக வந்து சேர்ந்தன. தான் இந்த வைத்தியாசாலை அனுபவங்களை நூலாக எழுத உள்ளதாகவும் இரண்டாவது அத்தியாயம் இரண்டு படுக்கைகள் தள்ளிப் படுத்திருக்கும் புத்த பிக்கு பற்றியது என்றும் கூறினார். “இது பௌத்த நாடு என்கிறார்கள். இந்த பிக்கு வைப் பார்க்க ஒருத்தரும் வருவதில்லை. பாவம் மனுஷன் சரியான கஷ்டப் படுது. நான் வாழ்க்கையில செய்த நல்ல வேலை என்டா ..மலையகத் துக்கு வந்து சேர்ந்ததுதான். யாழ்ப் பாணத்தில பிறந்த நான் மட்டக் களப்பில இப்ப இருக்கன். ஆனா...



என் மனசு முழுக்க மலையகந்தான்... பார்த்தீங்களே.. இப்போது காலையிலும் மாலையிலும் மலையகத்தில என்னிட்ட படித்த மாணவர்கள் என்ன வந்து பார்க்கிறாங்க... பாவம் அந்த பிக்கு... பிக்கு என்று போட்டு எழுதினா ஏதும் பிரச்சனை வருமோ... அல்லது சும்மா ஒரு சிங்களப் பெயரைப் போடுறதா...? என்னது உங்கட ஆலோசனை”. தான் எழுதப்போகும் அடுத்த நூலின் இரண்டாம் அத்தியாயம் பற்றி யதாகவே அவரது உரையாடல் இருந்தது.

“புத்த பிக்கு என்றே போடுங்க Sir. அப்போ தான் பௌத்த நாட் டின் லட்சணம் தெரியும்”

அந்த 45 நிமிடங்களும் இலக்கியம், ஆய்வு என பேசிக் கொண்டே இருந்தார். அவரது முகத்தில் அப்படி ஒரு மாற்றம் தெரிவ தாக கூட வந்திருந்த ராஜா அண்ணன் சொன்னார்.

அக்கரப்பத்தனை - ஹோல்புரூக் பாடசாலையில் இவரிடம் கற்ற ராஜா, பிரான்சிஸ், பரமசிவம், ரவி முதலானவர்கள் தான் நேரம் தவறாமல் வந்து கவனித்துக் கொண்டார்கள். குறிப்பாக நண்பர் பிரான்ஸிஸ். தினமும் காலையிலேயே சென்று விடுவார் . அவரது உடல் நிலை குறித்து எங்களுக்கு தெரிவிப்பார்.

வைத்தியர்கள் பற்றி கேட்டேன். “நல்லம். டாக்டர் ஜெயக்குமார் என்ற ஒரு தமிழரும் இருப்பதாக அறிந்தேன்” என் கையில் கொண்டு சென்ற - ‘களுகங்கை முதல் காவிரி வரை’ புத்தகத்தில் உள்அட்டையில் வைத்தியருக்கு ஒரு குறிப்பை எழுதி, “ இதனை டாக்டரிடம் காட்டுங்கள்... அவர் நிச்சயம் உதவுவார்” என்றேன்.

“ தம்பி இதைத் தலையணக்கு கீழ வையுங்க. இரவுக்கு வாசிக்க வேணும். என்ன உதவி... உடம்பிற்கு என்ன பிரச்சனை? என தமிழில் தெளிவாக கேட்டுத் தெரிஞ்சுகொண்டா போதும்... மூன்றா வது அத்தியாம் அதனைத் தான் எழுத நினைக்கிறேன். இந்த வயர்களை எல்லாம் மாட்டி இருக்கிற நிலைமைகள இந்தியாவுக்கு சோதனைக்கு ஏதோ அனுப்பி இருக்இகறாங்களாம் அது என்ன ? என விசாரித்து மனதில வச்சுக் கொள்ளத்தான்”

அடுத்த நூலை எழுதுவதிலேயே முழுக்கவனமாக இருந்தவர். வாசிப்பதிலும் ஆர்வமாக இருந்தார். சு. தவச்செல்வனின் ‘பாரதி’ குறித்த ஆய்வுப் பார்வை குறித்தும் பேசினார். இப்படி இடைவிடாத இலக்கிய உரையாடலுடனேயே அன்று விடைபெற்றுக் கொண்டு திரும்பினோம். அவரது உறவினரான நண்பர் மணிசேகரனுக்கு அழைப்பு எடுத்த ராஜா அண்ணன் சொன்னார் : “திலகர் தினமும் வந்தால் Sir சுகமாகி விடுவார் போல. இரண்டு பேருமே இலக்கியம் பேச அவரது முகத்தில் அப்படி ஒரு மாற்றம் தெரிந்தது”

மலையக அரசியல் அரங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு என்றதும், நண்பர் பிரான்ஸிஸ் இடம் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார். அது பற்றி நிகழ்வின் இறுதியிலே நன்றியுடன் தெரிவித்து விட்டு, நிகழ்வுக்காக மட்டக்களப்பில் இருந்து வருகை தந்த காகம் பதிப்பக நண்பர் இர்பான் வைத்திய சாலை சென்று Sir ஐ பார்ப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டு பிலிப்பைன்ஸ் வந்து விட்டேன்.

இன்று மீளவும் நாடு திரும்ப தயாரான போது ....

அடுத்து தான் எழுதப்போகும் நூலின் மூன்று அத்தியாயாங்கள் குறித்து என்னோடு உரையாடி இருந்து பேராசிரியர் யோகராசா எனும் மானுடனின் வாழ்க்கை அத்தியாயம் நிறைவடைந்த செய்தி யையே நண்பர் பிரான்ஸிஸ், ராஜா அண்ணன் என்னோடு பகிர்ந்து கொண்டு இருந்தார்கள். கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக மாதாந்தம் அத்தியாயங்களாக நான் எழுதி கொண்டுவரும் ‘மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி’ நூலாக்கத்துக்கு தயாராகிறது. அதற்கு பேராசிரியர் செ. யோகராசாவே முன்னுரை எழுதுவதாக இருந்தது.. அந்த அதிஷ்ட்டம் எனக்கு அற்றுப் போனது ... “அஞ்சலிகள் Sir.”

இப்படி பல நினைவுகளை சுமந்தவாறே விமானம் என்னைச் சுமக்கப் போகிறது... மானுட நேயன் - மலையக நேசன் உங்க ளுக்கு எங்கள் மண்ணில் மரணம் இல்லை, பேராசானே! நீங்காத நினைவுகளோடு அஞ்சலிக்கிறோம்! உங்களை மலையகம் பெற் றது எங்கள் யோகம் ! உங்களது முடிவுபெறா அந்த அத்தியாயமே எங்களது சோகம் !

# இந்தவார ராசிபலன் 10.12.2023 - 16.12.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - கார்த்திகை 24
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திரயோதசி

### மேஷம்
[அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம்]

எந்தச் செயலைச் செய்தாலும் வெற்றி காண்பீர்கள். செல்வாக்கும் சொல்வாக்கும் உயரும். சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். உத்தியோ கஸ்தர்களின் அலுவலக ரீதியான பயணங்களால் நன்மை உண்டா கும். வியாபாரிகள் பொருள்களை நல்ல விலைக்கு விற்பீர்கள். விவ சாயிகள் உப தொழில்களால் லாபம் பெறுவீர்கள். கலைத் துறையினரின் பழைய பாக்கி வசூலா கும். பெண்களுக்கு கணவருடன் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

### ரிஷபம்
[கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2]

சிறிய முயற்சியில் பெரிய லாபம் கிடைக்கும். அதிரடியான விஷ யங்களில் இறங்குவீர்கள். அரசு சலுகைகளைப் பெறுவீர்கள். உடல் ஆரோக்கியமும் மன வளமும் சிறக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். வியாபாரிகள் வியாபாரத்தைப் பெருக்கு வீர்கள். விவசாயிகள் லாபம் பெறுவீர்கள். அரசியல்வாதிகள் மேலிடத்தால் பாராட்டப்படுவீர்கள். கலைத் துறையினர் நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வீர்கள். பெண்கள் தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். மாணவர்கள் விளையாட்டுகளில் கவனம் செலுத்துவீர்கள்.

### மிதுனம்
[மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3]

இழுபறியான பூர்விகச் சொத்துகள் கைக்கு வந்து சேரும். இல்லத் தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். உத்தியோகஸ்தர்கள் பிறரிடம் பகைமையை காட்ட மாட்டீர்கள். வியாபாரிகளுக்கு போட்டிகள் குறை யும். விவசாயிகளுக்கு மனக் கவலை அகலும். அரசியல்வாதிகளுக்குத் தொண்டர்களின் ஆதரவு அதிகரிக்கும். கலைத் துறையினர் பொறு மையுடன் செயலாற்றி வெற்றி பெறுவீர்கள். பெண்கள் கணவரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். மாணவர்களின் கோரிக்கைகளை ஆசிரியர்கள் நிறைவேற்றுவார்கள்.

### கடகம்
[புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம்]

பெற்றோருக்கு உதவிகளைச் செய்வீர்கள். அலட்சியம் செய்த நண் பர்கள் மனம் மாறி உங்களை நேசிப்பார்கள். தொழிலில் முன்னேற் றம் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் பெறுவீர்கள். வியாபாரிகள் விற்பனையில் கவனம் செலுத்துவார்கள். விவசாயிகளின் மகசூல் உயரும். அரசியல்வாதிகள் எடுக்கும் முயற்சிகள் நிறைவேறும். கலைத் துறையினருக்கு மனதில் இருந்த பதற்றம் நீங்கும். ஆன்மிகப் பயணம் மேற்கொள்வீர்கள்.

### சிம்மம்
[மகம், பூரம், உத்திரம் 1]

தோற்றத்தில் பொலிவு கூடும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். தொழிலில் அனுகூலமான திருப்பம் உண்டாகும். உத்தியோகஸ் தர்களுக்கு அலுவலகத்தில் நிம்மதியான சூழல் நிலவும். வியாபாரி களுக்கு வியாபாரத்தில் பற்று வரவு கூடும். விவசாயிகள் எதிர்பார்த்த மழையால் மகிழ்ச்சி அடைவார்கள். அரசியல்வாதிகள் அரசு அதிகாரிக ளின் ஆதரவைப் பெற்று உற்சாகம் அடைவீர்கள். கலைத் துறையினரின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெண்கள் குடும்பத்தில் சகஜ நிலையை

### கன்னி
[உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2]

குடும்பத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள். உடல் உபாதைகள் மறையும். உத்தியோகஸ்தர்கள் தங்களது பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரிகள் ரகசியங் களைக் கசியாமல் பார்த்துக்கொள்வீர்கள். விவசாயிகள் பயிர்களை மேம்படுத்துவீர்கள். கலைத் துறையினர் வதந்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டாம். பெண்களுக்கு பொருளாதார நிலை உயர்வால் வாழ்க்கைத் தரம் உயரும். மாணவர்கள் வெளி விளையாட்டுகளில் வெற்றி பெறுவீர்கள்.

### துலாம்
[சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3]

பிரச்னைகளை அறிவுப் பூர்வமாகவும், அனுபவப் பூர்வமாகவும் அணுகுவீர்கள். உறவினர்களிடம் கருத்து வேறுபாடுகளைக் களை வீர்கள். உத்தியோகஸ்தர்கள் உயர்பதவி, பொறுப்புகளுக்குத் தேர்வு செய்யப்படுவீர்கள். வியாபாரிகள் பழைய கடன்களை வசூலிப்பீர்கள். விவசாயிகள் புதிய சந்தைகளை நாடிச் செல்வார்கள். அரசியல்வாதிகள் அடிக்கடி பயணம் செய்ய வேண்டிவரும். கலைத் துறையினர் புதிய ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவீர்கள்.

### விருச்சிகம்
[விசாகம் 4, அனுஷம், கேட்டை]

வருமானத்தில் திருப்தியான சூழல் நிலவும். வெளியூர் பயண வாய்ப்புகள் சாதகமாக அமையும். திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் சிறக்கும். உத்தியோகஸ்தர்கள் பணிநுட்பங்களை அறிவீர்கள் விவசாயிகள் பிறர் மத்தியில் பெருமை அடை வார்கள் கலைத் துறையினரின் திறமைகள் வெளிப்படும். பெரியோர்களின் ஆலோசனைகளைப் பெறுவீர்கள். மாணவர் படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.

### தனுசு
[மூலம், பூராடம், உத்திராடம் 1]

சவாலான பணிகளையும் செய்து முடிப்பீர்கள். சுப காரிய பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவீர்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைக் கும். வருமானம் உயரும். உத்தியோகஸ்தர்களின் திறமைக்கான மதிப்பு தாமதமாகவே கிடைக்கும். வியாபாரிகள் சில முக்கிய முடிவு களை எடுப்பீர்கள். விவசாயிகள் புதிய நிலங்களை வாங்க முயற்சி எடுப்பீர்கள். கலைத் துறையினர் துரிதமாகச் செயல்படுவீர்கள். பெண்கள் கோயில் திருப்பணிகளில் ஈடுபடுவீர்கள்.

### மகரம்
[உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2]

பெற்றோரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். கேளிக்கைகளில் பங்கேற்பீர்கள். தொழிலில் வெற்றி காண்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் அமைதியாக இருந்து காரியமாற்றுவீர்கள். வியா பாரிகளுக்கு கூட்டாளிகளின் ஆதரவால் அலைச்சல் குறையும். விவசாயிகள் குத்தகை பாக்கிகளைத் திருப்பி அடைப்பீர்கள். அரசியல்வாதிகள் எதிரிகளின் நடவடிக்கைகளை கவனிப்பீர்கள். கலைத் துறையினர் புதிய ஒப்பந்தங்களைப் பெறுவீர்கள். எதிலும் அலட்சியமாக இருக்க வேண்டாம். மாணவர்கள் விட்டுக் கொடுத்து நடப்பீர்கள்.


### கும்பம்
[அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3]

எண்ணிய காரியங்கள் நிறைவேறும். சுப நிகழ்ச்சிகளால் வீட்டை கலகலப்பாக்குவீர்கள். புதிய தொழில் செய்ய முனைவீர்கள். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களின் பணிகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். வியாபாரிகள் நண்பர்களுடன் கூட்டு முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். விவசாயிகள் விளைச்சலில் உயர்வைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் விரும்பிய பயணங்களை மேற்கொள்வீர்கள். கலைத் துறையினர் பிறருக்கு அறிவுரை வழங்குவீர்கள். பெண்கள் குடும்பத்தாருடன் பாசமாக இருப்பார்கள்.

### மீனம்
[பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி]

பொருளாதாரம் மேன்மையடையும். உடன்பிறந்தோர் உங்கள் சொல் கேட்டு நடப்பார்கள். வழக்குகளில் சாதகமான சூழல் நிலவும். மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரும். உத்தியோகஸ்தர்கள் கடமை உணர்வுடன் பணியாற்றுவீர்கள். வியாபாரிகள் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். விவசாயிகள் பிறரின் ஆதரவைப் பெறுவீர்கள். அரசி யல்வாதிகள் மேலிடத்திடம் நல்லுறவுடன் இருப்பீர்கள். கலைத் துறையினருக்கு நண்பர்கள் உதவி செய்வார்கள். பெண்கள் ஆடை, அணிகலன்களை வாங்குவீர்கள். மாணவர்கள் யோகா, பிராணாயாமம் கற்பீர்கள்

# ஏரிப் படுக்கைகளில் அடுக்கு மாடி கட்டடங்கள்! மீள ஆக்கிரமித்தது வெள்ளம்



சென்னை மடல்
-பகவான் சிங்-

கடந்த வாரம், 'மிஷாங்க்' புயல் காரணமாக பெய்த தொடர் மழையால் சென்னை பட்டபாட்டை நம் 'ஈழநாடு' செய்திகளில் பார்த்து வேதனை அடைந்திருப்பீர்கள். வெள்ளக்காடாக மாறிய சென்னையில் சிறு தீவுகளாகத் தோற்றமளித்த ஒவ்வொரு வீட்டிலுமிருப்பவர்கள் தங்கள் துன்பங்களை எடுத்துகூறும் காணொலிகளையும் பார்த்திருப்பீர்கள். 2015இன் இறுதியில் பெய்த பெருமழையை விட அதிக மழையை மிஷாங்க் புயல் ஏற்படுத்தியிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கிறது. கடந்த 40 ஆண்டுகளில், ஒரே முறையில் மிக அதிக மழைப்பொழிவு பதிவாகியிருப்பது மிஷாங்கில்தான் என்றும் ஒரு செய்தியைப் படித்த நினைவு இருக்கிறது.

புயல் பாதிப்பால் உயிரிழந்தவர் எண்ணிக்கை 17ஆக உயர்ந்திருப்பதாகவும், புதிதாக உருவான புறநகர்ப் பகுதிகளில் பல குடும்பங்கள் இன்னும் தத்தளித்து வருவதாகவும் மீட்புப் படகுகளுக்குக் காத்திருப்பதாகவும் காலையில் வெளியான செய்திகள் மிகுந்த வேதனையளித்தன. புதனன்று, மீட்புப் படையினர், நான்கு பேரின் சடலங்கள் நீரில் மூழ்கியிருந்ததைக் கண்டுபிடித்துள்ளனர். வெள்ளியன்று இந்தக் கட்டுரையை எழுதும்போதுகூட பல தரை தள வீடுகளில் நீர் புகுந்து விட்டதால் இன்னும் பல சடலங்கள் இருக்கக் கூடும் அச்சம் எழுகிறது. டிசெம்பர் 5 செவ்வாயன்று, மதியம் ஒரு மணியளவில் சென்னைக்கு 200 கிமீ தெற்கே நெல்லூருக்கும் காவலிக்கும் இடையில் மிஷாங்க் புயல் கரையைக் கடந்தது. முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தனது அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழுவை வழிநடத்தி, இந்தப் புயல் பாதிப்பிலிருந்து மீட்க பலருக்கும் உதவி கிடைக்க உழைத்தார் எனினும், மாநில அரசு இயந்திரத்தால் அனைவரின் முக்கிய தேவைகளையும் கவனித்துச் சீர்செய்யத் தவறிய அளவுக்கு, சேதமும் அதிகம் ஏற்பட்டிருக்கிறது. வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகி புயலாகி, மிகச் சீற்றம் பெற்று, அதி வேகமாகக் காற்றும் மிகப் பெருமளவில் கன மழையும் பெய்யும் என்று வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்திருந்தபோதும், தக்க தருணத்தில் அரசு போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற புகார்களும் எழுந்தன.

மத்திய அரசின் பிரதிநிதியாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வியாழனன்று சென்னை வந்து வெள்ளம் பாதித்த பகுதிகளை விமானம்மூலம் பார்வையிட்டார். முதலமைச்சர் ஸ்டாலினுடன் உரையாடிய

## மீட்பு பணியில் 80 வயது மூதாட்டி!

அவர், நிவாரண மற்றும் பழுதுபார்க்கும் பணிகளை விரைவுபடுத்த, மத்திய அரசு 5,060 கோடி ரூபாய் அவசர நிதியை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை மனுவையும் பெற்றுக்கொண்டார். பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த சிங், மத்திய மாநில அரசுகள் இணைந்து 'இந்த நெருக்கடியிலிருந்து மக்களை மீட்கச் சிறப்பாகச் செயல் படுவ'தாக கூறினார். மேலும் அவர், பிரதமர் நரேந்திர மோடி, புயலால் உயிரிழந்தவர்களுக்காக மிகுந்த வேதனையடைந்திருப்பதாகவும், நிலைமையை கூர்ந்து கவனித்து வருவதாகவும் தெரிவித்தார். மாநில அரசுக்கு இந்தப் புயல் நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு நிதி வழங்குவது பற்றியும் அவர் குறிப்பிட்டார். அதன் பிறகு பறந்து விட்டார். தமிழக பாஜக இச்சூழலைப் பயன்படுத்தி அரசியல் ஒக்சிஜனை அள்ளக்கூடிய வாய்ப்பைப் பெறவிடாமல். இதுபோன்ற இயற்கைப் பேரிடரின்போது அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்களையும் தண்ணீர் போத்தல்களையும் வழங்கி, அதைப் புகைப்படம் எடுத்து விளம்பரப் படுத்த வரிசை கட்டுவது நாமறிந்ததெ. தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பிரதமராகும் ஆர்வத்தில், வரும் மே மாதம் தேர்தலைப் பிரதமர் மோடி சந்திக்கவிருக்கும் நேரத்தில், இது போன்ற புகைப்படங்கள் தேர்தல் நேரங்களில் பிராச்சார பனர்களிலும் சுவரொட்டிகளிலும் அச்சாகும்போது

## தொடரும் வெள்ளத்தை தொடர்ந்து பார்வையிடும் முதலமைச்சர்கள்

மிகுந்த பயன் தரும். தனது பரபரப்பான அலுவல்களுக்கிடையில், தேர்தல் காலங்களில் தங்கள் காவிக் கட்சியின்மீது அன்பு காட்டாத திராவிட நாட்டில் அதிக நேரத்தை வீணடிக்க அமைச்சர் விரும்பவில்லை போலிருக்கிறது.

'தினமலர்' நாளிதழ், வியாழக்கிழமை தலைப்புச் செய்திகளில், "ஒரு லீற்றர் பால் 200 ரூபாய். குடிநீர் கேன் 250 ரூபாய். படகில் மீட்க 2,500 ரூபாய். வெள்ளக்காடாகக் கிடக்கும் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளின் நிலவரம் இதுதான். வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு, ஒருவேளை உணவு கிடைப்பது அரிதாகிப்போன நிலையில், நிவாரணம் என்ற பெயரில் போட்டோவுக்கு மட்டும் 'போஸ்' கொடுக்கும் அரசியல் மற்றும் விளம்பரப் பிரமுகர்களால், மீட்புப் பணிகள் தாமதமாகி வருகின்றன" என்று, சென்னை வெள்ளப் பாதிப்புகளை ஒட்டுமொத்தமாக முதல் பக்கத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டியது. சென்னை மற்றும் அதன் புறநகரில், தென் கிழக்குப் பகுதியில் உள்ள வேளச்சேரி போன்ற தாழ்வான பகுதிகள், முன்னொரு காலத்தில் 20-30 ஆண்டுகளுக்கு முன்னர், நீர்நிலைகளாக இருந்தவை. நகரம் விரிவாக விரிவாக, பெருகும் மக்கள் தொகையைத் தாங்கும் வண்ணம், 'றியல் எஸ்டேட்' தொழிலால் கண்மூடித்தனமாக இவை குடியிருப்புப் பகுதிகளாக மாற்றப்பட்டன. ஏரிப் படுக்கைகளான இவற்றின்மீது அடுக்குமாடிக் கட்டடங்களை எழுப்ப அரசியல்வாதிகளுக்கும் உள்ளூர் அதிகாரிகளுக்கும் லஞ்சம் வழங்கப்பட்டது.



சேவை மனப்பான்மை கொண்ட மனித நேயர்கள் பலர் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசுக்கு உதவியாக மிஷாங்க் அனர்த்தம் பாதித்த மக்களுக்கு நிவாரணம் அளிக்கக் களமிறங்கியுள்ளனர். 'சுமைதாங்கி' என்ற அறக்கட்டளையை நடந்திவரும் 80 வயதைக் கடந்த ஜெயலட்சுமி அம்மா, தனது தன்னார்வலர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டபோது கண்ட நெஞ்சை உருக்கும் காட்சிகள் குறித்து வேதனையுடன் என்னிடம் பகிர்ந்து கொண்டார்.

"வேளச்சேரியில் ஒரு கர்ப்பிணிப் பெண் கதறித் துடித்துக்கொண்டு, ஓர் எரிபொருள் நிரப்பு மையத்தைச் சுட்டிக் காட்டியபடியே இருந்தார். பிழைப்புக்காக இளம் மனைவியுடன் சென்னை வந்த ஒரு வட மாநிலத் தொழிலாளரான அவரது கணவர் அங்கு வேலை செய்து கொண்டிருந்தார். அந்தக் குழியில் அவர் மாட்டிப் பிணமானார். பெண்ணை அங்கிருந்து இழுத்து வெளியேற்றி, அவரது கணவரின் சடலத்தைத் தாங்கள் மீட்ப தாகவும், தற்போது தன்னையும், தான் சுமக்கும் சிசுவையும் தான் காத்துக்கொள்ளவேண்டும் என்று கூறிய அவரைப் பாதுகாப்பதாக உறுதியளித்தோம்" என்றார். இதை அவர் கூறும்போது அவரது தொண்டை அடைத்தது. மற்றொரு மீட்புப் பணியாளர், 17 உயிரிழப்புகள் குறித்து செய்தி ஊடகங்களிடம் தெரிவித்தபோது, இந்த எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று கூறினார். "காரணம், பிழைப்புக்காகப் புலம் பெயர்ந்த பல ஏழைத் தொழிலாளர்கள், இந்தத் தாழ்வான பகுதிகளில் கூடாரங்களில் வசிக்கிறார்கள், பலர் இந்த வெள்ளத்தில் உயிரிழந்திருக்கலாம்" என்றார். நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு வரும் அரசு அதிகாரிகளும் காவல் துறையினரும் இந்தப் பேரிடர் இழப்புகள் குறித்த சரியான புள்ளிவிவரங்களை வெளி யிட இன்னும் ஒரு சில நாட்கள் ஆகலாம்.

வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற சாமியார் நித்யானந்தாமீதோ, மர்மமான 'கைலாசா' வசிப்பிடத்திலிருந்து அவர் அனுப்பும் அபத்த நகைச்சுவைக் காணொலிகளின்மீதோ எனக்கு எந்தக் காலத்திலும் மரியாதை இருந்ததில்லை. ஆனால், மிஷாங்க் புயல் பாதிப்பையடுத்து அவர் வெளியிட்டுள்ள ஒரு காணொலி உண்மைகளை உரக்கக் கூறுவதாக உள்ளது. அவர் ஒன்றையும் புதிதாகச் சொல்லிவிடவில்லை. அது நாம் அனைவரும் அறிந்ததே. மேலும் ஒரு பத்திரிகையாளனாக நானே பல முறை எழுதியும் உள்ளேன், ஆனால் அது அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கானது. மிகவும் 'வைரலா'ன நித்தியின் காணொ



லியில் அவர் பேசியிருப்பதை நான் இங்கு தொகுத்து வழங்குகிறேன் - 'பேஸ்புக்கில் ஒரு மீம்ஸ் பார்த் தேன். பல ஆண்டுகளுக்கு முன்னாடி, அப்ப இருந்த முதலமைச்சர் வேட்டியை மடித்துக்கட்டி, சென்னை வெள்ளத்தைப் பார்வையிடுகிறார், அதன் பிறகு வந்த முதலமைச்சர் வேட்டியை மடித்துக் கட்டி சென்னை வெள்ளத்தைப் பார்வையிடுகிறார். வெவ்வேறு முதலமைச்சர்கள் வேட்டியை மடித்துக் கட்டிச் சென்னை வெள்ளத்தைப் பார்வையிடுவது போன்ற ஒரு புகைப்படம் பார்த்தேன். அப்படியென் றால், சென்னை வெள்ளம் இன்னும் வந்து கொண்டு தான் இருக்கிறது. எத்தனை முதல்வர்கள் வந்து போனா லும் பிரச்னை முடியவில்லை. அடிப்படைப் பிரச் னைக்கு விடை காணப்படவில்லை. பிரச்னை முற்றிப் போய்விட்டது. தண்ணியோட வீட்ல நம்ம வீடு கட்டுனதால நம்ம வீட்டுல தண்ணி வீடு கட்டுது. அவ்வளவுதான்" என்று கூறி வாய்விட்டுச் சிரிக்கிறார் நித்தி. நான் கூறியதுபோல

(14ஆம் பக்கம் பார்க்க)



# ஜே.வி.பி.யின் தேர்தல் வரலாறும் எதிர்கால வாய்ப்புக்களும்



வீரகத்தி தனபாலசிங்கம்

புதிய வருடம் பிறப்பதற்கு இன்னும் இருபது நாட்களே இருக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் அறிவித்த பிரகாரம் தேசிய தேர்தல்கள் நடைபெறுமானால் அடுத்த வருடம் இலங்கை அரசியல் பரபரப்பானதாக இருக்கப்போகிறது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையும் கூட ஜனாதிபதி தேர்தல்கள் குறித்துப் பேசினார். அடுத்த வருடம் முதலில் ஜனாதிபதி தேர்தலையும் அதைத் தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலையும் பிறகு மாகாணசபை தேர்தலையும் நடத்துவதே தனது திட்டம் என்றும் அவ்வாறு செய்வதன் மூலமாக அரசியலமைப்பில் திருத்தங்களைச் செய்வதற்கு அல்லது புதிய அரசியலமைப்பை வரைவது குறித்து ஆராய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தேர்தல்கள் பற்றிய பேச்சுக்கள் என்று வரும்போது இப்போது பிரதான பாரம்பரிய அரசியல் கட்சிகள் கடந்த காலத்தைப் போன்று உற்சாகமில்லாத மனநிலையில் இருப்பதை குறிப்பாக அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

என்னதான் ஜனாதிபதி விக்கிரமசிங்க தேர்தல்களைப் பற்றி அறிவிப்புக்களை அடிக்கடி செய்தாலும், தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா இல்லையா என்பதை கூறுவதற்கு மறுத்து வருகிறார். பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்திய பின்னரே தேர்தலில் களமிறங்குவது குறித்து தீர்மானிக்கப் போவதாக அவர் கூறுகிறார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவை பொறுத்தவரை அதன் தலைவர்கள் எந்த தேர்தல் நடந்தாலும் தங்களுக்கே வெற்றி கிடைக்கும் என்று கூறிவருகின்ற போதிலும், அவர்களுக்கு உண்மை நிலை விளங்கும்.

கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடிக்கு மூன்று ராஜபக்ச சகோதரர்கள் பொறுப்பு என்று கடந்த மாதம் உயர்நீதிமன்றம் வழங்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புக்கு பிறகு ராஜபக்சாக்களின் மக்கள் செல்வாக்கு மேலும் தாழ்ந்த நிலைக்கு சென்றிருக்கிறது.

அதை நன்கு உணர்ந்தவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தங்களது ஆட்சிக்கால பொருளாதாரச் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் ஒரு பிரயத்தனமாக பெருவாரியான புள்ளி விபரங்களுடன் கூடிய அறிக்கை ஒன்றை இரு வாரங்களுக்கு முன்னர் வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பானவர்கள் என்று உயர்நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருப்பவர்களில் ஒருவரான இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் கைவரிசை தெரிவதாக அவதானிகள் கூறுகிறார்கள்.

2015 ஜனவரியில் பதவியில் இருந்து இறங்கியபோது துடிப்பான ஒரு பொருளாதாரத்தையே கையளித்து விட்டுச் சென்றதாகவும் அதற்கு பிறகு பதவிக்கு வந்த "நல்லாட்சி" என்று சொல்லப்பட்ட மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் செயற்பாடுகளே பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணம் என்பதுமே அந்த அறிக்கையின் சாராம்சம்.

2015 ஜனவரியில் செய்தததைப் போன்ற அரசியல் தவறை நாட்டு மக்கள் மீண்டும் செய்யக்கூடாது என்று அறிக்கையின் இறுதியில் மகிந்த கூறியிருப்பது தங்களையே மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டுவரவேண்டும் என்று மக்களுக்கு அவர் வழங்கும் "ஆலோசனை" என்பதை தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

ராஜபக்ஷக்களை பொறுத்தவரை ஒன்றில் தாங்கள் அதிகாரத்துக்கு மீண்டும் வரவேண்டும் அல்லது கடந்தகால தவறுகளுக்காக தங்களை பொறுப்புக் கூற வைக்காத அரசாங்கம் ஒன்று பதவிக்கு வருவதை உறுதிசெய்யவேண்டும். அதை அடிப்படையாகக் கொண்டதாகவே அவர்களின் வியூகங்கள் அமையும். அதனால் அவர்களிடம் இருந்தும் தெளிவான அறிவிப்புக்கள் வருவதாக இல்லை.



ஆனால், தேர்தல்கள் தொடர்பில் மிகுந்த நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் பேசுகின்ற அரசியல் இயக்கமாக தேசிய மக்கள் சக்தியை காணமுடிகிறது. அதன் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவே ஜனாதிபதி தேர்தலில் இன்றைய நிலையில் முன்னரங்க வேட்பாளராக விளங்கும் ஒரு தோற்றப்பாடு அரசியல் பரப்பில் காணப்படுகிறது. ஊடகங்களையும் அவர் அண்மைக் காலமாக ஆக்கிரமித்து நிற்கிறார்.

நாட்டு மக்களில் இளைஞர்கள் உட்பட அதிகப்பெரும்பான்மையானவர்கள் தேர்தல்களில் மாத்திரமல்ல, அரசியல் கட்சி முறைமையிலும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்றும் சகல கட்சிகளும் சேர்ந்து பெறக்கூடிய வாக்குகளும் கூட மொத்த வாக்குகளில் ஐம்பது சதவீதத்தை தாண்டப்போவதில்லை என்றும் இவ்வருட நடுப்பகுதியில் நுவரெலியாவில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தேசிய சட்ட மகாநாட்டில் ஜனாதிபதி விக்கிரமசிங்க கூறியதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்தவேண்டியிருக்கிறது.



**ஜனாதிபதி விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பதை கூற மறுத்துவருகிறார். ராஜபக்சாக்களும் உறுதியான முடிவை எடுக்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள். தேர்தல்கள் குறித்து நம்பிக்கையுடன் பேசுகின்ற கட்சியாக தேசியமக்கள் சக்தியே விளங்குகிறது. மக்கள் செல்வாக்கில் அநுரா குமார சஜித் பிரேமதாசவை விடவும் கணிசமான அளவுக்கு முன்னிலையில் இருப்பதாக கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன.**

அண்மைக்கால கருத்துக் கணிப்புக்கள் சகலதுமே தேசிய மக்கள் சக்தியே மக்கள் செல்வாக்கில் முன்னிலையில் இருப்பதை வெளிக்காட்டின.

இறுதியாக ஒக்டோபரில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு (Sri Lanka Opinion Tracker Survey of the Institute of Health Policy) ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தேவையான ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறக்கூடிய அளவுக்கு திசாநாயக்கவின் மக்கள் செல்வாக்கு அதிகரித்திருப்பதாகக் கூட தெரிவித்தது.

திசாநாயக்கவுக்கு 51 சதவீதமும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு 30 சதவீதமும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு 13 சதவீதமும் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகக் களமிறங்கக்ககூடியவருக்கு 6 சதவீதமும் மக்கள் ஆதரவு இருப்பதாக அது கூறியது

கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்கள், சர்வதேச அமைப்புக்கள், சிந்தனை குழாம்கள் மற்றும் அரசியல் கட்சிகளும் கூட இந்த கருத்துக் கணிப்புக்களினால் மருட்சிக் குள்ளாகியிருக்கின்றன.

கொழும்பிலும் மாகாணங்களிலும் குறிப்பிட்ட எண்ணிக்கையான மக்களிடம் கருத்துக்களை கேட்டறிந்து செய்யப்பட்ட இந்த கருத்துக்கணிப்பின் நம்பகத்தன்மை குறித்து பலருக்கு சந்தேகம் இருக்கலாம். கருத்துக் கணிப்புகளில் மக்கள் கூறுகின்றவற்றுக்கும் அவர்கள் வாக்களிக்கும் முறைக்கும் இடையில் வேறுபாடு இருக்கலாம். அதற்கு பல தேர்தல்களை உதாரணமாகக் கூறமுடியும்.

ஆனால், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளின் விளைவாகவும் பிரதான அரசியல் கட்சிகள் மீதான வெறுப்பின் விளைவாகவும் இலங்கையர்கள் மத்தியில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற அரசியல் மனப்போக்கை கருத்திற்கொண்டு நோக்கும்போது மேற்கூறப்பட்ட தரவுகளின் பிரகாரம் அல்லது அவற்றை ஓரளவுக்கு ஒத்த முறையில் மக்கள் வாக்களித்தால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை என்றும் ஜனாதிபதி தேர்தலில் முதலாவது சுற்று வாக்கெடுப்பில் எந்த வேட்பாளருக்கும் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைக்காமல் இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் சில அவதானிகள் கூறுகிறார்கள்.

கடந்த வாரம் "சண்டே ரைம்ஸ்" அரசியல் விவகார ஆசிரியருக்கு அநுரா குமார திசாநாயக்க வழங்கிய நேர்காணலில் 2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு 3.1சதவீத வாக்குகள் மாத்திரமே கிடைத்தன. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறவேண்டுமானால் 1500 சதவீதம் அதன் வாக்குகள் அதிகரிக்கவேண்டும் என்று அவரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

அதற்கு பதிலளித்த திசாநாயக்க, "அரசியல் கணிதம் அல்ல, அது சமூக அறிவியல். அவ்வாறு வாக்குகளை அதிகரிப்பது கணிதத்தின் அடிப்படையில் யதார்த்தமில்லாததாகத் தோன்றலாம். ஆனால், சமூக அறிவியலின் பிரகாரம் அது சாத்தியமாகும்" என்று கூறினார்.

இத்தகைய பின்னணியில் ஜே.வி.பி.யின் தேர்தல் வரலாற்றில் இதுகாலவரையான அதன் செயற்பாடுகளை ஒரு தடவை திரும்பிப் பார்ப்பது உகந்ததாக இருக்கும்.

ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீர 1982 அக்டோபர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சந்தர்ப்பமே அந்த கட்சியின் முதல் தேர்தல் அனுபவமாகும். அதுவே இலங்கையின் முதலாவது ஜனாதிபதி தேர்தலுமாகும்.

அதில் விஜேவீரவுக்கு வெறுமனே 275,000 வாக்குகளே கிடைத்தன. ஆனால் அவரால் பழம்பெரும் இடதுசாரித் தலைவரான கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வாவை விடவும் கூடுதலான வாக்குகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

1983 கறுப்பு ஜூலை இன வன்செயல்களை அடுத்து ஜெயவர்தன அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டதற்கு பிறகு 1994 ஆம் ஆண்டிலேயே ஜே.வி.பி. மீணடும் தேர்தலில் போட்டியிட்டது.

1994 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலான பொதுஜன முன்னணியின் வேட்பாளரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு எதிராக ஜே.வி.பி. அதன் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான நிஹால் கலப்பதியை நிறுத்தியது

ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பதாக மக்களுக்கு வாக்குறுதியளித்த திருமதி குமாரதுங்கவை ஆதரிக்க தீர்மானத்ததை அடுத்து ஜே.வி.பி. போட்டியில் இருந்து விலகினாலும் கலப்பதியின் நியமனப் பத்திரம் வாபஸ் பெறப்படவில்லை. அதனால் அவரது பெயரும் சின்னமும் வாக்குச்சீட்டில் இடம்பெற்றது. அவருக்கு 22, 749 (0.03 சதவீதம் ) வாக்குகள் கிடைத்தன.

பிறகு 1999 டிசம்பர் ஜனாதிபதி தேர்தலில் தனது இரண்டாவது பதவிக்காலத்துக்கு மக்களின் ஆணையைக் கேட்ட திருமதி குமாரதுங்கவை எதிர்த்து ஜே.வி.பி.யின் வேட்பாளராகப் போட்டியிட்ட நந்தன குணதிலகவுக்கு 344, 173 (4.08 சதவீதம்) வாக்குகள் கிடைத்தன.

2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் அந்த கட்சி சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான மகிந்த ராஜபக்சவை ஆதரித்தது.

அதற்கு பிறகு நடைபெற்ற 2010 ஜனவரி ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக எதிரணியின் பொது வேட்பாளராக களமிறக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை ஜே.வி.பி.ஆதரித்தது.

அதேபோன்றே 2015 ஜனவரி ஜனாதிபதி தேர்தலிலும் மீண்டும் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக எதிரணியின் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரசின் தலைமைப் பதவியை கிழக்குக்கு ஏன் வழங்கக்கூடாது?

**பனங்காட்டான்**

அடுத்த மூன்று வாரங்களில் பிறக்கப் போகின்ற 2024 இலங்கையில் தேர்தல் ஆண்டாக பிரகடனமாகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலும், நாடாளுமன்றத்துக்கான தேர்தலும் இவ்வருடத்தில் இடம்பெறுமென நம்பிக்கையூட்டும் வகையில் அறிவித்து வருகிறார் ரணில் விக்கிரமசிங்க. இவரது கடந்த கால வாக்குறுதிகளை அறிந்தவர்கள் தேர்தல் அறிவிப்பை முழுமையாக நம்புவதாக இல்லை.

இரண்டு தேர்தல்களில் ஒன்று இடம் பெறும், ஆனால் அது எதுவென்று கூற முடியாதென பொதுஜன பெரமுனவின்



தலைவர் மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார். இரண்டில் எந்தத் தேர்தல் இடம்பெற்றாலும் அதன் வெற்றி தோல்வியில் இவரது அணிக்கு முக்கிய வகிபாகம் இருக்கும்.

இம்முறையும் தமிழ் மக்களின் வாக்குகளே ஜனாதிபதி தேர்தல் முடிவை தீர்மானிக்கும் என்ற தோரணையில் சிலர் கருத்துகளை பரப்பி வருகின்றனர். இப்படியான எதிர்பார்ப்புகள் இருந்ததால் தான் கடந்த ஜனாதிபதி தேர்தலில் 65 லட்சம் சிங்கள வாக்குகள் கோதாவுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தது. இதற்கிடையில் தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டுமென்ற குரலும் வந்ததைவிட போனது வேகமாயிற்று.

இப்போது தாயகத் தமிழர்களைப் பொறுத்தளவில் அவர்கள் எதிர்நோக்கும் முக்கியமான தேர்தல் தமிழரசுக் கட்சியின் தலைவரைத் தெரிவு செய்வது. எப்போதும் இல்லாதவாறு முதன்முறையாக இப்பதவிக்கு இருவரின் பெயர்கள் தாக்கலாகியுள்ளது. இவர்களில் ஒருவர் விலகிக்கொள்ளாவிடில் வாக்களிப்பு தேர்தலாக இடம்பெறுவது தவிர்க்க முடியாது போகும்.

கடந்த பொதுத்தேர்தலின்போது ஒருவர் தோளில் மற்றவர் கைபோட்டவாறு கூட்டாக வாக்கு வேட்டை நடத்திய சிவஞானம் சிறீதரனும், எம்,ஏ. சுமந்திரனும் கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிடுகின்றனர். இது சிலவேளைகளில் ஏற்கனவே சிதறுண்டு போயிருக்கும் கட்சியை அடிநிலைக்குக் கொண்டு செல்லலாம்.

கடந்த பொதுத்தேர்தலில் இவர்கள் இருவரும் தாம் வெல்ல வேண்டுமென்பதற்காக இணைந்து பரப்புரை செய்து வாக்குகளைப் பெற்று ஒருவாறு வென்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தின் மூன்றாவது இடம் அப்போதைய கூட்டமைப்பின் புளொட் பிரதிநிதியான சித்தார்த்தனுக்குக் கிடைத்தது.

இந்த வகையில் தாம் இருவருமே கட்சி யின் தலைமைப் பதவிக்கு பொருத்தமானவர்கள் என்று இவர்கள் தமக்குள் நினைத்துக் கொண்டார்கள்போல் தெரிகிறது. பொதுத்தேர்தலின்போது இரட்டையர்களாக மக்களுக்குக் காட்சியளித்தவர்கள் இப்போது எதிரெதிராக நிற்கின்றனர்.

1949ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் திகதி தனிக்கட்சியாக உருவான தமிழரசுக் கட்சிக்கு ஆங்கிலத்தில் பெடரல் (சமஷ்டி) கட்சி என்ற பெயருண்டு. இதன் நிறுவகத் தலைவர் திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் காலத்துக்குக் காலம் மாறாத அடிப்படைக் கொள்கைகளுடன், பல பெயர் மாற்றங்களுக்குள்ளான தமிழரின் அரசியல் அணிக்கு தமிழரசுக் கட்சியே தலைமை வகித்து வந்தது.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளை தமிழர் ஐக்கிய முன்னணி என பெயர் மாறி, வடக்கும் கிழக்கும் இணைந்த தனியாட்சிக் கோரிக்கையுடன் 1977 தேர்தலில் தமிழர் ஐக்கிய



> **தமிழரசுக் கட்சி நிறுவப்பட்ட 1949ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அதன் தலைமைப் பதவியை வடக்கின் பிரதிநிதிகள் ஐவரும், கிழக்கின் பிரதிநிதிகள் மூவரும் வகித்துள்ளனர். வடக்கு கிழக்கு இணைப்பை நாளும் பொழுதும் பேசுபவர்கள் இப்பதவியை முறைப்படி கிழக்கு மாகாணத்துக்கு ஏன் வழங்கக்கூடாது.**

விடுதலை முன்னணியானது. இந்தக் கோரிக்கையின் பலத்தால் வடக்கு கிழக்கில் பதினெட்டு ஆசனங்களை இலகுவாகக் கைப்பற்ற முடிந்தது.

2001ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவானது. 2004 தேர்தலின்போது இதன் தலைமைத்துவமும் தமிழரசுக் கட்சிக்கேயானது. இதனால் தமிழர் பிரச்னைத் தீர்வு உட்பட அனைத்து விடயங்களுக்கும் உள்நாட்டு அரசியலிலும் சர்வதேச அரங்கிலும் இக்கட்சியே பிரதான இடத்தைப் பெற்றது.

இந்தப் பின்னணியில் பார்க்கையில் வளர்ச்சியும், தொய்வும் மாறி மாறி தேர்தல் வேளைகளில் ஏற்பட்டதைக் காணலாம். இருப்பினும் இதனை அழிந்துவிடாது காப்பாற்ற வேண்டுமென்ற மனோபாவம் தமிழரிடத்தில் தொடர்ந்து இருந்து வருகிறது.

முக்கியமாக, வடக்கையும் கிழக்கையும் இணைத்ததான கட்சியின் செயற்பாடுகள், பிரதான பதவிகள் தெரிவின் போது இரண்டு மாகாணங்களையும் சமத்துவமாக மதிக்கும் தன்மை என்பவை மட்டுமன்றி இதன் தூரப்பார்வையும் மக்களால் விரும்பப்பட்டது.

இதற்கு உதாரணமாக, கட்சியின் தலைமைப் பதவி இரண்டு மாகாணங்களுக்குள்ளும் முரண்பாடு ஏற்படாத வகையில் போட்டியின்றி, ஒருமனதாக கடந்த ஏழரை தசாப்தங்களாக தெரிவானதை குறிப்பிடலாம். அது மட்டுமன்றி தலைவர் மற்றும் செயலாளர் பதவிகள் இரு மாகாணங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தெரிவானதையும் சுட்ட வேண்டும்.

இதுவரை திருவாளர்கள் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், என்.ஆர்.இராஜவரோதயம், சி.மு.இராசமாணிக்கம், டாக்டர் இ.எம்.வி.நாகநாதன், அ.அமிர்தலிங்கம், இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் தலைவர்களாக பதவி வகித்துள்ளனர். இவர்களுள் சிலர் மூன்று தடவையும், இரண்டு தடவையும் இப்பதவி வகிப்பதற்கு கட்சிக்குள் விட்டுக்கொடுப்பு



இருந்து வந்துள்ளது. என்.ஆர்.இராஜவரோதயம், சி.மு.இராசமாணிக்கம் ஆகியோர் வடக்கில் இடம்பெற்ற கட்சி மாநாடுகளுக்கு தலைமை தாங்கி பெருமை சேர்த்தனர். டாக்டர் இ.எம்.வி.நாகநாதன் கிழக்கில் கல்முனையில் இடம்பெற்ற மாநாட்டில் தலைமை தாங்கியிருந்தார். இது இரு மாகாணங்களதும் தமிழ்த் தேசிய இணைப்புக்கு அடையாளமாக அமைந்தது.

1949ஆம் வருடத்திலிருந்து இன்றுவரை வடக்கிலிருந்து ஐவரும் கிழக்கிலிருந்து மூவரும் தலைமைப் பதவியை அலங்கரித்துள்ளனர். ஒருபோதும் இப்பதவிக்கு போட்டியிருக்கவில்லை. இப்போது முதன்முறையாக இருவர் பெயரில் வேட்பு மனு தாக்கலாகியுள்ளது. இதில் எவராவது ஒருவர் விட்டுக்கொடுக்கவில்லையெனில் அது கட்சியையே பாதிக்கும்.

இருவரில் யார் வென்றாலும் கட்சியை வளர்ப்பதில் அனைவரும் இணைந்தே செயற்படுவோமென சுமந்திரன் இப்போதைக்குத் தெரிவித்திருந்தாலும், அவ்வாறே எல்லாம் சுபமாக முடியுமென்ற அரசியல் காலநிலை 'வீட்டுக்குள்' இல்லை.

இரு தரப்பினரையும் இணைத்து செயற்படும் ஆற்றலும் முதுமைத் தகைமையும் கொண்ட கட்சியின் மூத்த துணைத்தலைவரான சீ.வீ.கே.சிவஞானம், இப்போதைய தலைமைப் போட்டியில் ஒதுங்கியிராது சுமந்திரனைப் பிரேரித்தது பலரதும் புருவத்தை உயர்த்தியுள்ளது.

சி.வி.விக்கினேஸ்வரன் வடக்கின் முதலமைச்சராக இருந்தபோது அவரைப் பதவி நீக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அப்போதைய ஆளுநரிடம் சீ.வீ.கே.சிவஞானத்தினால் கையளிக்கப்பட்டது. எதிர்பாராதவிதமாக சுமந்திரனின் திருகுதாளத்தால் அத்தீர்மானம் தமது கையில் திணிக்கப்பட்டதாக சிவஞானம் அப்போது பலரிடமும் தெரிவித்திருந்தார்.

சிவஞானம் இப்போது அதே சுமந்திரனை ஆதரிப்பதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. அடுத்த மாகாண சபைத் தேர்தலில் இவரை முதலமைச்சராக்க சுமந்திரன் உறுதியளித்திருக்கலாம் என்பது முதலாவது. திரு. சிறீதரன் பல தடவை அபாண்டமான கருத்துகளை இவருக்கு எதிராகத் தெரிவித்ததால் அவரை தலைவராக அனுமதிக்கக் கூடாதென்பது சிவஞானம் அவர்களுடைய முடிவுக்கான இரண்டாவது காரணமாக இருக்கலாம்.

1987இல் திலீபன் உண்ணாவிரதம் இருந்தவேளையில் வடக்கு, கிழக்குக்கு ஓர் இடைக்கால நிர்வாகம் அமைக்கும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் தலைவர் பதவிக்கு திரு. சிவஞானத்தையே விடுதலைப் புலிகள் பரிந்துரைத்தனர். அதேசமயம் இச்சபைக்கு கிழக்கு மாகாணத்தின் பிரதிநிதிகள் எவ்வாறு நியமனமாக வேண்டுமென்பதையும் விடுதலைப் புலிகள் அழுத்தம் திருத்தமாக இலங்கை அரசுக்குத் தெரிவித்திருந்தனர்.

ஆனால், விடுதலைப் புலிகளின் செல்வாக்கை கிழக்கில் இழக்கச் செய்யும் வகையில் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன பெயர்ப்பட்டியலை மாற்றியமைத்ததால் திரு.சிவஞானம் இடைக்கால நிர்வாகத் தலைவர் பத




வியை ஏற்க மறுத்தார். இது நிகழ்ந்தபோது பதினெட்டு வயது மாணவனாக இருந்த சிறீதரன் உண்மையை அறியாது அதற்குப் புறம்பாக திரு.சிவஞானத்தை இழிவுபடுத்தும் வகையில் சில கருத்துகளை தொடர்ந்து கூறி வந்தமையால் சுமந்திரனை ஆதரிக்கும் நிலைக்கு இவர் தள்ளப்பட்டிருக்கலாமென்ற கருத்து பல இடங்களிலும் பகிரப்படுகிறது.

எதுவானாலும், தமிழரது தலைமைப் பதவிக்கு போட்டி, வாக்களிப்பு, வெற்றி தோல்வி என்பவை இருக்கக்கூடாதென்பதே கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் மட்டுமன்றி பலதரப்பட்டவர்களின் நிலைப்பாடாகவுள்ளது. இதற்கான ஒரே வழி போட்டியில் இறங்கியுள்ள இருவரையும் ஒருவாறு ஒதுங்கச் செய்து, புதிய ஒருவரை மரபு முறைப்படி போட்டியின்றித் தெரிவு செய்வதே.

தமிழரசுக் கட்சியில் எழுதாத நியமம் என்பது தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளில் எப்போதும் ஒன்று வடக்குக்கும் மற்றது கிழக்குக்கும் இருக்க வேண்டுமென்பது. இதுவரை தலைமைப் பதவி நிரப்பப்பட்ட முறைமையின்படி பார்க்கின் இம்முறை கிழக்கு மாகாணத்துக்கே தலைமைப் பதவி கொடுக்கப்பட வேண்டும். இக்கருத்து உள்நாட்டில் மட்டு மன்றி புலம்பெயர்ந்த தமிழர் மத்தியிலும் மேலோங்கியுள்ளது.

கட்சியின் புதிய தலைவர் பதவிக்கு மட்டக்களப்பு மாவட்ட மூத்த பிரமுகரும் முன்னாள் எம்.பியுமான திரு.சிறீநேசனை பலரும் விரும்புகின்றனர். அதே சமயம், நெருக்கடியான காலங்களில் கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தனுடன் இணைந்து பணியாற்றிய மாவை சேனாதிராஜாவை செயலாளராக நியமிக்கலாம் என்ற கருத்தும் பரவலாக ஓடிக்கொண்டிருக்கிறது.

போட்டிக்குத் தயாரான இருவரும் அதிலிருந்து விலகாவிடில் கட்சியின் ஒற்றுமை பாதிக்கப்படுவது மட்டுமன்றி, கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் தாங்கள் புறக்கணிக்கப்படுவது போன்ற உணர்வும் ஏற்படும். இப்போது தேவை தமிழ்த் தேசிய சிந்தனையில் வடக்குக் கிழக்கை இணைத்து செயற்படுத்தக் கூடிய ஒரு தலைவரே. அந்தத் தலைமை இன்றைய நிலையில் கிழக்கிலிருந்து வருவதே மிக மிகப் பொருத்தமானது.

●

# மனித உரிமை என்னும் மகத்தான வரம்

- ச.பாலமுருகன்




நமக்கான அடிப்படை உரிமைகளைச் சட்டம் நமக்கு வழங்கியுள்ளதாகவே கருதிக்கொள்கிறோம். உண்மையில், நமது அரசமைப்புச் சட்டமானது நமக்கு அடிப்படையாக உள்ளவையாகவே உரிமைகளை அங்கீகரித்துள்ளது. ஏனெனில், உரிமைகளை எவரும் யாருக்கும் வழங்க முடியாது. நமது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்திலிருந்து உள்வாங்கப்பட்டவை. இந்த உலகில் வரலாறு முழுவதும் அநீதிக்கு, பாகுபாட்டுக்கு எதிராக நடத்தப்பட்ட இடைவிடாத போராட்டத்தால் உரிமைகள் நிலைபெற்றுள்ளன. உலகம் மீண்டும் மீண்டும் உரிமைகள் சார்ந்து மாற்றத்துக்கு உள்ளாகிறது.

மனித உரிமைப் பிரகடனத்தின் 30 உரிமைகள், எளியவர்கள், நாதியற்ற மனிதர்கள், அகதிகள் என அனைத்து விளிம்புநிலை மனிதர்களுக்குமான சம உரிமையை விளம்புகின்றன. சித்ரவதையிலிருந்து விடுதலை, தனி மனிதச் சுதந்திரம், உயிர் வாழும் உரிமை, கருத்துரிமை, கல்வி கற்கும் உரிமை, அரசியல் உரிமை, குடும்பமாக மாறும் உரிமை என உரிமையின் பல பரிமாணங்களை இப்பிரகடனம் உறுதிசெய்கிறது. இதன் உள்ளடக்கம், 'சுதந்திரம் மனிதர்களுக்கானது. அதை எவரும், எப்போதும், எதன் பொருட்டும் பறிக்க முடியாது. உலகின் எல்லா மனிதர்களும் சுதந்திரத்துடனும், சமத்துவத்துடனுமே பிறக்கிறார்கள்' என்கிறது.

**விசாலமான பார்வை**

இரண்டாம் உலகப் போரில் பொது மக்கள், போர் வீரர்கள் எனக் கோடிக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். உலகச் சமூகத்துக்கு நிகழ்ந்த அந்தப் பெரும் அழிவுக்குப் பின்னர் உலகில் மனிதப் படுகொலைகள், சக மனிதனைக் கண்ணியமின்றி நடத்தும் அவலங்கள், பாகுபாடுகள், அநீதிகள் போன்றவற்றைத் தடுக்க 'உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம்' (Universal Declaration of Human Rights), 1948 டிசம்பர் 10 அன்று ஐ.நா. அவையில் அறிவிக்கப்பட்டது. அனைத்து மக்களுக்கும் சமத்துவம், கண்ணியம், சமநீதி என்ற கோட்பாடுகளின் வெளிப்பாடாய் அந்த மனித உரிமைப் பிரகடனம் இருந்தது. அதை உருவாக்கிய குழுவில் இந்தியாவின் சார்பில் ஹன்சா மேத்தா, எம்.ஆர்.மாசனி, லட்சுமி மேனன் ஆகியோர் இருந்தனர். இவர்களில், ஹன்சா மேத்தா இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய வரைவுக் குழுவில் இருந்த 15 பெண் உறுப்பினர்களில் ஒருவர்.

அந்த சாசனத்தில் மக்களைக் குறிக்க 'ஆண்' என்ற சொல் இருந்தபோது இந்தியாவின் சார்பில் அதை 'மனிதர்கள்' எனப் பொதுச் சொல்லாக மாற்றினர்.




பாகுபாடு என்ற இடத்தில் 'நிறத்தாலோ அல்லது அரசியல் வேறுபாட்டாலோ' என மாற்றம் கொண்டுவரப்பட்டது. பணி செய்யும் உரிமை என்ற இடத்தில் அந்தப் பணி, 'நியாயமான, சாதகமான பணிச் சூழல் கொண்டதாக' என அவர்கள் திருத்தினர். மேலும் மதச்சார்பின்மை, பல கலாச்சாரத்தை ஏற்பது, உலக மனிதர்களாக நிற்பது போன்றவை மனித உரிமைகளின் அங்கம் என்பனவற்றையும் சேர்த்தனர். இவ்வரைவுக் குழுவில் இருந்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஜப்ருல்லா கான், "விரும்பிய




மதத்தைத் தேர்வு செய்கின்ற அல்லது மதத்தை நிராகரிக்கின்ற உரிமை, குரானில் சுட்டிக்காட்டப்பட்ட மனிதர்களின் மதச் சுதந்திர உரிமை ஆகும். இந்தச் சாசனத்தில் அது இணைக்கப்பட வேண் டும்" என்றார். சவுதி அரேபியா இதைக் கடுமையாக எதிர்த்தது. மதம் மாறும் உரிமையை இந்த சாசனத்தில் குறிப்பி டத் தேவையில்லை என்றது. ஆனால், மற்றொரு இந்தியப் பிரதிநிதியான முகமது ஹபீப், மத வழிபாட்டு உரிமை என்பது விரும்பிய மதத்தைத் தேர்வு செய்யும் உரிமையையும் உள்ளடக்கியது என அக்கருத்தை ஆதரித்தார். இந்தியாவில் உள்ள முஸ்லிம்களுக்கு அத்தகைய சுதந்திரம் உள்ளது என்றார். இதைய




டுத்து இந்த மத உரிமை சாசனத்தில் இணைக்கப்பட்டது. இப்படியான விசாலப் பார்வையாலும் உரிமைக் கரங்களாலும் உருவாக்கப்பட்ட உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தின் 75ஆம் ஆண்டு, டிசம்பர் 10 அன்று அனுசரிக்கப்படுகிறது.

**பரப்பப்படும் வெறுப்பு**

மனிதர்களின் உள்ளத்தில் படிந்துள்ள சமத்துவத்துக்கு எதிரான சிந்தனைகள், மனித உரிமையை மறுதலிக்கின்றன. சாதியம், மதவாதம் ஆகியவை, 'மனிதர்கள் சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும் பிறக்கிறார்கள்' என்ற உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தின் முதல் வாசகத்துக்கே எதிராக நிற்கின்றன. அடிமை நிலை, உரிமைகளை நசுக்குவது, சக மனிதனை வெறுப்பது என மனித உரிமைகளுக்கு அச்சிந்தனைகள் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன. உலகில் மனிதர்களைக் கொத்துக் கொத்தாய்க் கொன்ற எல்லா பாசிசத் தத்துவங்களும் முதலில் வெறுப்பு என்ற புள்ளியிலிருந்து தொடங்கியவை. அவை மானுடப் பரப்பின் மகத்துவத்தை உணர்வதைத் தடுப்பவை.

நாம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற உயரிய நோக்கம் கொண்ட அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டவர்கள். ஆனால், அதை உணர்வுபூர்வமாக உள்வாங்க வேண்டியது மிகவும் அவசியம். மனித உரிமைப் பிரகடனத்தின் உரிமைகள் மக்கள் சமூகத்துக்கானவை. சக மனிதனைக் கண்ணியத்துடன் நடத்தும் மனித உரிமைப் பண்பாட்டினை வலியுறுத்துபவை. ஆனால், இப்போதும் உலகின் ஒரு பகுதியில் குழந்தைகள் மீதும், குடியிருப்புகள் மீதும் குண்டுகள் வீசப்படுகின்றன. அக்டோபர் 7 முதல் நவம்பர் 2 வரை, 25,000 டன் வெடிகுண்டுகளைக் காசா பகுதியில் இஸ்ரேல் வீசியுள்ளது. இது இரண்டாம் உலகப் போரின்போது, 1945 ஆகஸ்ட் 6 அன்று ஜப்பானின் ஹிரோஷிமா மீது வீசப்பட்ட 'லிட்டில்பாய்' என்ற அணுகுண்டைக் காட்டிலும் அதிகம். அமெரிக்கா வீசிய அந்த அணுகுண்டு, 15,000 டன் எடை மட்டுமே கொண்டது.

**வலிமை பெறும் உரிமைத் தத்துவம்**

ஐ.நா. அவையின் அதிகாரம் மிக்க பாதுகாப்பு அவையில், போரை நிறுத்த நடக்கும் இஸ்ரேலுக்கு எதிரான முயற்சிகளை அமெரிக்கா தனது 'வீட்டோ' அதிகாரம் மூலம் தடுக்கிறது. அதிகாரம் மிக்க நாடுகள் தங்கள் அதிகாரத்தை நிறுவும் மையமாக ஐ.நா. அவையை மாற்ற முயல்கின்றன. வெறும் நாடுகளின் கூட்டமைப்பு என உலக அரசியல் தலைமைகளின் மையமாக ஐ.நா. சுருக்கப்படுகிறது. உண்மையில் உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம் அந்த அவையை மானுடத்தின் உரிமையைப் பாதுகாக்கும் இடமாக இன்றும் நம்பிக்கை வெளிச்சத்தைப் பரப்புகிறது. காசா போர் போல அதிகாரம் மிக்க நாடுகளின் நேரடி - மறைமுக உதவியுடன் பாலஸ்தீன மக்களை இஸ்ரேல் கொன்றொழிப்பது நடக்கிறது.

ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் பலமுறை வேண்டுகோள் வைத்தும் இந்த மனிதப் பேரழிவு தடுக்கப்படவில்லை. இத்தனைக்கும் இந்தப் போருக்கு எதிராக உலகின் பல்வேறு பகுதிகளில் மக்கள் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர். தங்களின் ஆட்சியாளர்களுக்கு எதிராக அவர்கள் ஒவ்வொருவரும், உலக மனிதர்களில் ஒருவராய் நின்று தங்கள் குரலை உயர்த்தி அக்கொடுமையைக் கண்டித்துள்ளனர். மனித உரிமை என்ற தத்துவம் இன்னமும் வலிமை பெற்றுள்ளது. மனித உரிமைப் பிரகடனம் என்பது விடுதலையை உணர்பவர்கள், சுதந்திர வாழ்க்கையை நோக்கித் தங்களையும் தங்கள் சமூகத்தையும் நகர்த்துபவர்கள், உரிமைகளுக்கான கோரிக்கைகளை விடாது எழுப்புபவர்கள் எனத் தொடர் சமூகச் செயல்பாட்டால் மட்டுமே உயிர்ப்புடன் இருக்கும். ஆம்! நாம் அனைவரும் மனித உரிமைகளின் பிரிக்க முடியாத அங்கமே.

# இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் மொழியும் யாழ். பல்கலைக்கழகமும்!

கந்தையா அருந்தவபாலன்

**இலங்கைத் தமிழர்களின் பண்பாட்டு மையமான யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கெனத் தனித்துவமாக உருவாக்கப்பட்டதாதாகக் கருதப்பட்டு வந்த யாழ்ப்பாணப் பல்லகலைக்கழகம் எதிர்காலத்தில் முற்று முழுதாகச் சிங்கள மயமானதாக மாறிவிடுமோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.**

இலங்கையில் இன்று திறந்த, சுதேச வைத்திய மற்றும் அரங்காற்றுக் கலைப் பல்கலைக்கழகங்கள் உட்பட பதினேழு அரச பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவை வரையறுக்கப்பட்ட தன்னதிகாரங்களைக் கொண்ட தனித்துவமான உயர் கல்வி நிறுவனங்களாக இருப்பதுடன் இப்பல்கலைக் கழகங்கள் அனைத்தும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் ஒருங்கிணைக்கப்பட்ட ஆளுகையின் கீழ் இயங்கி வருகின்றன. இந்தப் பல்கலைக் கழகங்கள் மட்டுமன்றி வெவ்வேறு துறைகளுக்கான இருபது அரச உயர்கல்வி நிறுவனங்களும் (Institutions) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் ஆளுகையின் கீழ் இயங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று இப்பல்கலைக் கழகங்களின் கற்பித்தல் மொழி குறிப்பிட்ட சில பாடத்துறைகள் நீங்கலாக ஆங்கிலமாகவே காணப்படுகிறது. இலங்கையில் 1960 களில் ‘சுய மொழி’க் கொள்கை அறிமுகமாவதற்கு முன்னர் பல்கலைக் கழகங்களில் மட்டுமன்றி பாடசாலைகளிலும் ஆங்கிலமே கற்பித்தல் மொழியாக இருந்து வந்தது. சுயமொழிக் கொள்கை அறிமுகத்துடன் தரம் ஒன்று தொடக்கம் பல்கலைக் கழகம் வரை தனது சொந்த மொழியில் இலங்கையர் ஒருவர் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் உலக மாற்றங்களுக்கேற்ப இலங்கையும் தன்னைத் தகவமைக்க வேண்டிய தேவை அதிகரிக்க ஆங்கில மொழியின் முக்கியத்துவம் உணரப்பட்டது. இதன் காரணமாக அரச பல்கலைக் கழகங்கள் படிப்படியாகத் தமது கற்பித்தல் மொழியை ஆங்கிலமாக மாற்றத் தொடங்கின. 80, 90 களில் முக்கிய பாடத் துறைகளில் சுய மொழி, ஆங்கிலம் என்ற இருமொழிக் கற்பித்தல் முறையில் தொடங்கி இன்று பெரும்பாலான பாடத்துறைகளின் கற்பித்தல் மொழி ஆங்கிலம் மட்டுமே என்ற நிலைக்கு மாறியுள்ளது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் உள்ளடங்கும். பாடசாலையில் பதின்மூன்று ஆண்டுகள் சுய மொழியில் கற்று வரும் ஒரு மாணவன் திடீரென பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழிக் கற்றலுக்கு மாறும்போது பல்வேறு இடர்களை எதிர் நோக்குவதாகவும் அம்மாணவனின் அடிப்படை உரிமை மறுக்கப்படுவதாகவும் முன்வைக்கப்படும் விமர்சனங்களில் ஓரளவு உண்மை இருப்பினும் இவ்விடயம் மக்கள் மத்தியில் பெருமளவு விவாதத்துக்குரிய ஒன்றாக இல்லை என்பதே யதார்த்தம். அதாவது நாட்டின் எப்பகுதியிலிருந்தும் மாணவர்களோ அல்லது அவர்களின் பெற்றோர்களோ இம்முறைக்கு எதிர்ப்புகளை வெளியிட்டதாகச் செய்திகளில்லை. இவ்வாறான ஒரு நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சட்டத்துறை தமிழ் மாணவர்களுக்கு தமிழ்மொழியில் கற்கும் வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை பாராளுமன்ற உறுப்பினர் உட்பட சில தரப்புகளால் தற்போது முன்வைக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. உண்மையில் இக்கோரிக்கைகள் மாணவர் சார்பானவை மட்டுந்தானா அல்லது அதனுடன் வேறு அவசிய நோக்கங்களும் உள்ளனவா என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

தமிழர்களுக்கென தனித்துவமான ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்ற நீண்ட காலக் கோரிக்கையின் விளைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் 1974 இல் இலங்கையின் ஆறாவது பல்கலைக்கழக வளாகமாக உருவாக்கப்பட்டு 1979 இல் அது தன்னதிகாரம் கொண்ட ஒரு பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டது. இலங்கையின் ஏனைய பல்கலைக் கழகங்கள் போல இப் பல்கலைக் கழகத்திலும் இன்றுள்ளது போல 1983க்கு முன்னரும் சிங்கள மாணவர்களும் கல்வி கற்று வந்தனர். எனினும் 1983இல் ஏற்பட்ட இனக்கலவரமும் அதனைத் தொடர்ந்து நிலவிய யுத்த சூழ்நிலைகள் காரணமாக புதிய சிங்கள மாணவர்கள் இங்கு இணைக்கப்படவில்லை என்பதுடன் பழைய மாணவர்களும் தென்பகுதிப் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டனர். யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் வழமையான தேசியக் கொள்கைக்கு அமைய படிப்படியாகச் சிங்கள மாணவர்கள் இப்பல்கலைக கழகத்தின் பல்வேறு துறைகளுக்கும் இணைக்கப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக இப்பல்கலைக் கழகத்தில் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்து வருவதுடன் சில பீடங்களில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையை விட சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதையும் காண முடிகிறது. இதனால் இலங்கைத் தமிழர்களின் பண்பாட்டு மையமான யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கெனத் தனித்துவமாக உருவாக்கப்பட்டதாதாகக் கருதப்பட்டு வந்த யாழ்ப்பாணப் பல்லகலைக்கழகம் எதிர்காலத்தில் முற்று முழுதாகச் சிங்கள மயமானதாக மாறிவிடுமோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. இந்த நிலைமையையும் கருத்திற் கொண்டே கற்பித்தல் மொழியாக தமிழும் இருக்க வேண்டுமென்ற கோரிக்கை நோக்கப்பட வேண்டும்.

ஒரு மாணவன் தான் கற்ற அல்லது தனக்குப் பரிச்சயமான வேறு மொழிகளை விடத் தனது தாய் மொழியில் சிந்திப்பது, கற்பது, தேர்வு எழுதுவதே மேலானது, வாய்ப்பானது என்பது அறிவியல் உண்மை. அத்துடன் அது அவனது உரிமையும் கூட. எனினும் உயர்கல்வியைப் பொறுத்து கற்பித்தல் மொழியாக எது இருக்க வேண்டும் என்பதை அக்கல்வியின் நோக்கம், கிடைக்கக்கூடிய கற்றல் வளங்கள், மாணவர் விருப்பம், எதிர்கால வாய்ப்புகள் மற்றும் இக்காரணிகளைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்படும் நாட்டின் தேசியக் கொள்கை போன்றவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதே சிறப்பானது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. அதிலும் குறிப்பாக தொழில் வாண்மைக்குரிய பாடத்துறைகளில் இது மிகவும் அவசியமானது. இவ்வடிப்படையிலேயே இன்று பல்கலைக் கழகங்களில் பொருத்தமான கற்பித்தல் மொழியாக ஆங்கிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் தொடர்ந்து ஆங்கிலமே கற்பித்தல் மொழியாக இருந்து வருவதுடன் அது தொடர்பாக எவ்வித விமர்சனங்களும் இதுவரை எழவில்லை இங்கு கவனிக்கத்தக்கது.




சட்டமும் மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் ஒரு வாண்மைக் கற்கை நெறியாகும். எனினும் கற்பித்தல்-கற்றல் செயன்முறையில் கணிதம், விஞ்ஞானம் போன்றவற்றை விட சட்டத் துறைக் கல்விக்கு மொழிப் பயன்பாடு, மொழி ஆளுமை என்பன அதிகளவில் அவசியமாக உள்ளன. இதனால் தாய் மொழியில் அதைக் கற்பது ஒப்பீட்டு ரீதியில் இலகுவானது. எனினும் தொழில்சார் அறிவு விருத்திக்கும் எதிர்காலப் பிரயோகத்திற்கும் அது எவ்வளவு தூரம் உதவும் என்பது கேள்விக்குரியது. ஏனெனில் சட்டத்தைக் கற்பதற்குரிய கற்றல் வளங்கள் மட்டுமன்றி சட்டத்தொழிலுக்கான வளங்களும் பெருமளவுக்கு ஆங்கில மொழிகளிலேயே காணப்படுகின்றன. அடிப்படைச் சட்டங்கள், சட்ட நூல்கள், வழக்குகளில் எடுத்தாளப்படக்கூடிய மேல் நீதிமன்றங்களின் முற்பட்ட தீர்ப்புகள் பெரும்பாலும் ஆங்கில மொழிகளிலேயே காணப்படுகின்றன. அண்மைக் காலங்களில் இலங்கையில் உருவாக்கப்படும் சட்டங்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இருப்பினும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட சட்டங்கள்கூட இன்றும் வழக்கிலுள்ளன. அத்துடன் சர்வதேச சட்டங்கள் ஆங்கில மொழியிலேயே உள்ளன. மேலும் இன்று எமக்குத் தேவையான விடயங்களைப் பெற்றுக் கொள்வதற்கான மிகச்சிறந்த களமாக இணையங்களே உள்ளன. இவற்றில் சட்டம் தொடர்பான பெரும்பாலான விடயங்கள் ஆங்கிலத்திலேயே தரவேற்றம் செய்யப் பட்டுள்ளன. கிடைக்கின்ற ஒரு சில மொழிபெயர்ப்புகள் கூட உரிய முறையில் இல்லை என்ற கருத்தும் உண்டு. இன்றும் முக்கியமான பல சட்டச் சொற்களுக்கு அல்லது சொற்றொடர்களுக்குப் பொருத்தமான தமிழ் வடிவத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம்.

மறுபுறத்தில் சட்டத் தொழிலை எடுத்துக் கொள்வோமானால் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள கீழ்நிலை நீதிமன்றங்களில் அதிகளவிலும் மாகாண மேல் நீதிமன்றில் ஓரளவும் தமிழ் மொழிப் பயன்பாடு காணப்படுகிறது. மாறாக தென்பகுதி நீதி மன்றங்களில் குறிப்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் போன்றவற்றில் பெருமளவுக்கு ஆங்கிலமும் ஓரளவுக்கு சிங்களமும் பயன்பாட்டிலுள்ளன. இவற்றுக்கு மட்டுமல்ல இத்துறையிலான ஏனைய தொழில் வாய்ப்புகளுக்கும், உயர்கல்விக்கும் சட்டம் மட்டுமல்ல அதை ஆங்கிலத்தில் கையாளக்கூடிய மொழித் திறனும் மிக அவசியமாக உள்ளது. இதனை சட்டக் கற்கையின் தொடக்க நிலையிலிருந்து பெற்றுக்கொள்வதே பொருத்தமாக இருக்கும் என்பது துறைசார் வல்லுநர்களின் கருத்து. இதற்காகவே இலங்கைப் பல்கலைக் கழகங்களில் சட்டக் கற்கை நெறியில் ஆங்கிலம் கற்பித்தல் மொழியாக உள்ளது. இலங்கையில் சட்டக் கற்கை நெறி கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களிலும் திறந்த பல கலைக்கழகங்களிலும் வழங்கப்படுகின்றன. திறந்த பல்கலைக் கழகம் தவிர கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் மட்டுமே மூன்று மொழிகளிலும் கற்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. எனினும் இங்கும் கூட ஆங்கிலத்திற்கே முக்கியம் அளிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடியும். பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறுவது போல பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியிலான சட்டக் கற்கை நெறி இல்லை.

மேலே சுட்டிக் காட்டியவாறு சட்டம் உட்பட தொழில் வாண்மைக்குரிய உயர் கல்விக்கான கற்பித்தல் மொழி ஆங்கிலமாக இருப்பது தமிழ் மொழியைவிட அதிக பயனுறுதி வாய்ந்தது என்ற வாதத்தை சிலர் நிராகரிக்கின்றனர். அதற்காக அவர்கள் முன்வைக்கும் ஆதாரங்களில் மிக முக்கியமானது சீனா, யப்பான், பிரான்ஸ், கொரியா போன்ற நாடுகள் தமது சொந்த மொழியிலேயே உயர் கல்வியை வழங்கி வருகின்றன என்பதாகும். அக்கருத்து உண்மையாயினும் அந்த நாடுகளுடன் இலங்கையை ஒப்பிட முடியுமா? இலங்கையையே ஒப்பிட முடியாதபோது இங்குள்ள தமிழர்களின் உயர்கல்வித்துறையை அந்நாடுகளுடன் ஒப்பிட முடியுமா? தமிழர்களின் தனித்தவமான பல்கலைக் கழகம் எனக்கருதப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அல்லது அங்குள்ள பேரசிரியர்கள் தமது துறைசார்ந்து இதுவரை எத்தனை தமிழ் நூல்களை எழுதியுள்ளனர்? அல்லது எத்தனை பொருத்தமான ஆங்கில நூல்களை மொழி பெயர்த்துள்ளனர்? தமிழ் நூலாக்கம், மொழி பெயர்ப்பு போன்றவற்றுக்கு பல்கலைக்கழகத்தில் விசேட கட்டமைப்பு, நிதி ஒதுக்கீடுகள் போன்ற ஏற்பாடுகள் உள்ளனவா? தனிமனித விருத்தி தொடர்பாக அதிக கரிசனை காட்டும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பரவலாக மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் சென்றடையக் கூடியவாறான துறை சார்ந்த கருத்துகளை, கட்டுரைகளை, ஆய்வுகளை வெளியிடுகின்றனரா? ஏன்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கனடாவில் சமீபத்தில் வெளிவந்த தமிழ் நூல்கள்



குரு அரவிந்தன்

கனடாவில் கோடைகாலம் வந்தால் நூல் வெளியீட்டு விழாக்கள் தொடர்ந்து நடைபெறுவதுண்டு. அணிந்துரை அல்லது வாழ்த்துரை எழுதவோ அல்லது வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றவோ சில எழுத்தாளர்கள் தங்கள் புத்தகங்களைக் கொண்டு வந்து தருவதுண்டு. அப்படி என்னிடம் சமீபத்தில் கிடைத்த அந்த நூல்களை எப்படியாவது ஆவணப் படுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. எனக்குக் கிடைத்த நூல்களை மட்டும், சர்வதேச ஆர்வலர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதாலும், மற்றும் அடுத்த தலைமுறையினருக்குப் பயன்படும் என்பதாலும் இங்கு ஆவணப்படுத்துகின்றேன்.

எழுத்தாளர் அகில் சாம்பசிவம் தொகுத்து வெளியிட்ட 'இலக்கியவெளி' சிறப்புமலர் **3-12-2023** ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிடப்பெற்றது. எழுத்தாளர் வ.ந.கிரிதரனின் 'ஒரு நகரத்து மனிதனின் புலம்பல்' (கவிதைத்தொகுப்பு), 'நவீன விக்கிரமாதித்தன்' (நாவல்), வ.ந. கிரிதரன் கட்டுரைகள் ஆகியன **19-11-2023** ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிடப்பெற்றது. இதே தினத்தில் கலாநிதி சண்முகம் வெற்றிவேல் எழுதிய 'இலக்கியத்தில் உளவியல்' 'தமிழர் பண்பாட்டு அடை யாளச் சிக்கல்கள்' ஆகிய நூல்கள் ஸ்காபரோவில் வெளியிடப்பெற்றன.

திருமதி ஆதிலட்சுமி சிவகுமார் அவர்களின் 'ஒற்றை வானமும் ஒரு பறவையும்' (கவிதைத் தொகுப்பு ) 'பொன்வண்டு' (சிறுகதைத் தொகுப்பு) ஆகியன கனடி யத் தமிழ் வானொலியால் **12-11-2023** ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிடப் பெற்றது. கனடா தமிழ் கவிஞர் கழகத்தின் கவிச் சரம் இதழ் **5-11-2023** ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிட்டு வைக்கப்பட்டது. ஒலி,ஒளி ஊடகர் பி. விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூல் அறிமுகவிழா **4-11-2023** ஆம் ஆண்டு ஸ்காபரோவில் நடைபெற்றது. எழுத்தாளர் சம்பந்தனின் 'விழியும் துளியும்' என்ற சிறுகதைத் தொகுப்பு **14-10-2023** ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிடப்பெற்றது. உரையாளர் பொன்னையா விவேகானந்தனின் 'தமிழ் மொழிக் கல்வி,' 'தமிழ்ப் பண்பாடு,' 'நாடகங்கள்,' 'பெயர்வுத் தமிழ்ச்சமூகம் - இருப்பும் இடர்களும்' ஆகிய நூல்கள் **8-10-2023** ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிட்டு வைக்கப்பெற்றது.

மாவை நித்தியானந்தனின் 'இனிச் சரிவராது,' 'ஐயா லெக்சன் கேட்கிறார்' ஆகிய நூல்கள் வெளியிட்டும், 'சின்னச் சின்ன நாடகங்கள்,' 'சட்டியும் குட்டியும்,' 'நாய்க்குட்டி ஊர்வலம்' ஆகிய மூன்று நூல்கள் ஸ்காபரோவில் **7-10-2023** ஆம் ஆண்டு அறிமுகம் செய்தும் வைக்கப்பட்டன. மறுமலர்ச்சி மன்றத்தின் சிறுகதைப் போட்டியில் தெரிவான சிறுகதைகள் அடங்கிய 'மறுமலர்ச்சி' நூல் அறிமுகவிழா ஸ்காபரோவில் **1-10-2023** ஆம் ஆண்டு நடைபெற்றது. வீணைமைந்தன் கே.ரி. சண்முகராஜாவின் 'தமிழ் சினிமாவும் நடிகர் திலகமும்,' 'மண்ணும் மனசும்,' 'தமிழ் சினிமாவில் மகாகவி பாரதி பாடல்கள்,' 'மறக்கத் தெரியாத மனசு' ஆகிய நூல்களின் அறிமுகவிழா ரொறன்ரோவில் **23-09-2023** ஆம் ஆண்டு நடைபெற்றது. இதே தினத்தில் கனடா தொல் காப்பிய மன்றத்தின் 'தொல்காப்பிய ஆண்டுமலர்' ஸ்காபரோவில் வெளியிட்டு வைக்கப்பெற்றது.



எழுத்தாளர் அகணி சுரேஸ் அவர்களின் 'குவலயம் ஆளும் குடிசார் பொறியியல்' என்ற கட்டுரைத் தொகுதி **13-8-2023** ஆம் ஆண்டு ஸ்காபரோவில் வெளியிட்டு வைக்கப்பெற்றது. தீபச்செல்வனின் 'பயங்கரவாதி' என்ற நாவல் **30-7-2023** ஆம் ஆண்டு ஸ்காபரோவில் அறிமுகம் செய்து வைக்கப்பெற்றது. ஆசி காந்தராஜாவின் 'அகதியின் பேர்ளின் வாசல்' என்ற நாவல் ஸ்காபரோவில் **29-7-2023** ஆம் ஆண்டு வெளியிட்டு வைக்கப் பெற்றது.

எழுத்தாளர் குரு அரவிந்தன் வாசகர்வட்டத்தின் ஆதரவில் 'அம்மாவின் பிள்ளைகள்' (நாவல்), 'ஆறாம் நிலத்திணை' (கட்டுரை), 'சதிவிரதன்' (சிறு கதைத் தொகுப்பு) ஆகிய நூல்களின் அறிமுக விழாவும், இனிய நந்தவன பிரசுரத்தின் வெளிநாட்டுக் கதைத் தொகுப்பான 'சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும்' என்ற சிறுகதைத்தொகுப்பும், எழுத்தாளர் மாலினி அரவிந்தனின் 'பறவைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பும் மிசசாக்காவில் **22-7-2023** ஆம் ஆண்டு வெளியிட்டு வைக்கப்பெற்றது.

தமிழர் தகவல் ஆண்டுமலர் ரொறன்ரோவில் வெளியிட்டு வைக்கப்பெற்றது. எழுத்தாளர் க. நவம் எழுதிய 'எனினும் நான் எழுகின்றேன்' என்ற கவிதை நூல் ஸ்காபரோவில் **24-6-2023** ஆண்டு வெளியிட்டு வைக்கப்பெற்றது. காலம்செல்வனின் 'பனிவிழும் பனைவனம்' என்ற நூல் ஸ்காபரோவில் வெளியிட்டு வைக்கப்பெற்றது. விஜயராணி மதியழகனின் 'அழியாப் புகழ்' என்ற கவிதைத் தொகுப்பு மென்றியலில் வெளியிட்டு வைக்கப்பெற்றது. புலவர் மயில்வாகனனின் 'குறட்கவியமுதம்' என்ற கவிதைத் தொகுப்பு ஸ்காபரோவில் வெளியிடப்பெற்றது. செ. அன்புராசா அடிகள் எழுதிய 'அன்புள்ள ஆரியசிங்க' என்ற நூல் ஸ்காபரோவில் **16-6-2023** ஆம் ஆண்டு அறிமுகம் செய்து வைக்கப்பெற்றது.

---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**க. தில்லைநாதன், மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** இதுவரை காலமும் புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரதிநிதிகளாக இருந்துவந்த உலகத் தமிழர் பேரவையினர் திடீரென்று இலங்கை வந்து 'சிறந்த இலங்கைக்கான சங்கம்" என்ற அமைப்பின் பௌத்த தேரர்கள் குழுவினருடன் சேர்ந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்திருக்கின்றனரே. ஒன்றும் புரியவில்லையே. உங்களுக்காவது ஏதாவது புரிகின்றதா?

**வியுக்தியார்:** இதில் புரிந்துகொள்வதற்கு என்ன இருக்கின்றது? அவர்கள் யார் என்பது தெரியாத உங்களைப் போன்றவர்களுக்கு வேண்டுமானால் இது ஆச்சரியமானதாக இருக்கலாம். ஆனால் அவர்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்துவைத்திருக்கின்ற இந்த வியுக்தி யாருக்கு இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. அவர்க ளின் இலங்கை முகவர்கள் யார் என்று தெரிந்தால் நீங்களும் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க மாட்டீர் கள். உலகத் தமிழர் பேரவை என்பதே ஒன்று இரண்டு பிரமுகர்களைக் கொண்ட ஒரு அமைப்புத்தான். அவர்கள் இப்போது தத்தமது சொந்த நலனை கருதி என்ன செய்தாலும் கேட்பதற்கு யார் இருக்கின்றார்கள்?

---

**செல்வா கேசவன் சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** 'விடுதலைப் புலிகள் அமைப்புபற்றி பேசுவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 9 எம். பிக்களுக்கு மாத்திரமே உரிமையுண்டு. சாணக்கியனுக்கு உரிமையில்லை. ஏனெனில், அவரின் செயல்பாடுகளும் உறவுகளும் சிங்களவர்களுடன் தொடர்புபட்டுள்ளது. இவர் சிங்கள பெண்ணை மணக்கவுள்ளார்" என்று ஒரு சிங்கள எம்.பி. கூறியருக்கிறாரே. என்ன ஒரே குழப்பமாக இருக்கின்றதே?

**வியுக்தியார்:** இதில் நீங்கள் குழம்புவதற்கு என்ன இருக்கின்றது? அவர் தனது தந்தையைப் போலவே வேறு இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை திருமணம் செய்வதில் என்ன தவறு இருக்கின்றது. அதுசரி, அது என்ன புலிகளைப் பற்றிப் பேசுவதற்கு மற்றைய 9 எம்.பி.க்களுக்கு மாத்திரமே உரிமை இருக்கின்றது என்கிறார் அந்த எம்.பி.? அவர்களில் இன்னுமொருவரும் சிங்களவர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்திருப்பது அவருக்குத் தெரியாதோ? ஆனாலும் தமிழ் எம்.பி. ஒரு வர் அதாவது தமிழ் தேசியம் பேசுகின்ற ஒரு எம்.பி. சிங்களவர்களுடன் தொடர்பு வைத்திருக்கக்கூடாது என்று இலங்கையில் ஏதேனும் சட்டம் இருக்கின்றதா என்ன?

**எம். கௌதம், அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** அம்பாந்தோட்டை - மத்தள சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகளை ரஷ்ய- இந்திய கூட்டு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துளள்ளாரே. அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டுவிட்டது. இப்போது விமான நிலையம் இந்தியாவிடம் வழங்கப்படகின்றது. இப்படியே தொடர்ந்தால் என்னதான் நடக்கப்போகின்றது?

**வியுக்தியார்:** அட நீஙங்கள் வேறு. அது என்ன விமானம் வந்துபோகும் இடமாகவா இருக்கின்றது? அதனைக் கட்டுவதற்கு பட்ட கடனை கொடுக்க முடியாமல்தான் நாடே வங்குரோத்து நிலைக்கு வந்தது. இப்போது அதனை யாருக்காவது கொடுத்துவிட்டால் 'அதனை கட்டி தீனிபோடுகின்ற" செலவாவது மிஞ்சும்தானே என்று சந்தோசப்படுவதை விட்டுவிட்டு கவலைப்படுகின்றீகளே. நமது பாராளுமன்ற கட்டிடத்தை இன்னும் விலைபேசவில்லை என்று சந்தோசப்படுங்கள் கௌதம்.

**ரி. ஜீவன்குமார் வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** தீர்மானங்கள் மேற்கொள்ளும்போது தாம் விரைவாக செயற்பட்டதாகவும் ஊழலுக்கு எதிராக செயற்பட்டமைக்காக தாம் அமைச்சு பதவியை யும் இழந்துள்ளதாகவும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான்ரணசிங்க தெரிவித்துள்ளாரே. அவர் சொல்வதைப் பார்த்தால் அவர் மீது பிழை இருப்பதாகத் தெரியவில்லையே?

**வியுக்தியார்:** தான் பிழைவிட்டதாகத்தானே அவரே சொல்லியிருக்கிறார். தீர்மானங்களை மேற்கொள்ளும் போது தான் விரைவாக செல்பட்டதாக சொல்வதே அவர் தவறுசெய்திருக்கிறார் என்பதுதானே அர்த்தமாகின்றது. கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது இரசாயன உரங்களுக்கு பதிலாக இயற்கை உரங்களை பயன்படுத்தவேண்டும் என்று சொன்னார். அவர் இயற்கை உரத்தை பாவிக்கச் சொன்னது நல்ல விடயம் தான், அதற்காக இரசாயன உரத்தை அவசரப்பட்டு தடை செய்தது, அந்த தீர்மானத்தை விரைவாக எடுத்தது மாதிரித்தானே? கோட்டா தனது முடிவை விரைவாக எடுத்ததுதானே அவரின் தோல்விக்கு காரணமானது. அதுபோலத்தான் இவரும் தீர்மானத்தை அவசரமாக எடுத்ததும் தவறானதுதானே.

---

**இரா. இராஜேஸ்கரன், ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** வடக்கு-கிழக்கில் முப்படைகள் ஊடாகவே திட்டமிட்ட வகையில் போதைப்பொருள் பாவனை ஊக்குவிக்கப்படுவதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் குற்றம் சுமத்தியுள்ளாரே. அப்போ நாட்டில் மற்றைய இடங்களில் யார் ஊக்குவிக்கிறார்கள் என்பதை நீங்களாவது அறிவீர்களா?

**வியுக்தியார்:** அவர் சொன்னால் சரியாகத்தானே இருக்கும். முப்படையினர்தான் அவற்றை திட்டமிட்டு ஊக்குவிக்கிறார்கள் என்பது அவர்களோடு கூட இருப்பவர்களுக்குத்தானே நன்றாகத் தெரியும். அவர்கள் இப்படி திடமாக அதனைக் கூறுகிறார்கள் என்றால், அதன் அர்த்தம் நாம் புரிந்துகொள்ளக்கூடியதுதான். வடக்கில் நடப்பதுதானே அவர்களுக்குத் தெரியும். ஆனால் போதைப்பொருள் பாவனை என்பது நீங்கள் கேட்பது போல நாடு முழுவதும் உள்ள பிரச்சினைதான். நல்லவேளை தெற்கிலுள்ள சிங்கள இனவாதிகள் இன்னமும் இவர்களைப்போல வடக்கிலிருந்து தான் தெற்குக்கு போதைப் பொருள்கள் வருகின்றன என்று சொல்லத் தொடங்கவில்லை.

# துபாய் காலநிலை மாற்ற (கோப் 28) மாநாடு: போர் பகைமையில் உலகின் துயர் துடைக்கப்படுமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஒரு சிறந்த மாசற்ற பூமியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு கோப்- 28 மாநாடு ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள துபாயில் நவம்பர் 30-ஆம் தேதி முதல் டிசம்பர் 12-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

படிம எரிபொருள் வளத்தை நம்பி இருக்கும் நாடான துபாயில் நடத்தப்படும் இந்த மாநாட்டிற்கு பல தரப்பினர் தங்கள் எதிர்ப்புகளையும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. துபாய் தனது எரிபொருள் உற்பத்தியை அதிகரிக்க முயற்சி மேற்கொள்வது இந்த எதிர்ப்பிற்கு காரணமாக கூறப்படுகிறது.

**வரலாற்றில் அதி வெப்பமான ஆண்டு:**

வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவிற்கு அதிக வெப்பமான ஆண்டாக இந்த ஆண்டு பதிவாகி இருப்பதாகவும், இது குறித்து உடனடி நடவடிக்கை தேவை என்பதை வலியுறுத்தி துபாயில் காலநிலை மாற்றத்திற்கான மாநாடு நடைபெறுவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவிப்பு ஒன்றை அண்மையில் வெளியிட்டிருந்தது.

ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்பு பருவநிலை மாற்றத்திற்காக முதல் சர்வதேச மாநாடு பாரிசில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் உலகின் பெரும்பான்மையான நாடுகளின் தலைவர்கள் எல்லாம் கலந்து கொண்டார்கள்.

அமெரிக்காவும் வளர்ந்த மேற்கத்தய நாடுகளும் அதிகமான கரியமில வாயுக்களை வெளியில் உமிழ்வதுடன், குறிப்பாக படிம எரிபொருட்கள் (Fossil Fuel) என்று அழைக்கப்படக்கூடிய பெட்ரோல், டீசல்,

**இந்த மாநாட்டில் மாசற்ற பூமியை உருவாக்குவதை நோக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும், அதனை நடைமுறைப்படுத்தும் சாத்தியங்கள் வெகு கடினமாகவே இருக்கும்**

நிலக்கரி, எரிவாயு ஆகியவற்றை வாகன மற்றும் வீட்டு உபயோகங்களுக்கு மிதமிஞ்சிப் பயன்படுத்துவதால் தான் நாளுக்குநாள் புவி வெப்பம் அதிகரித்து வருகிறது எனவும் கூறப்படுகிறது.

பூமியில் அதிகரித்துவரும் வெப்பநிலையால் ஏற்படும் பருவநிலை மாற்றங்களைப் பற்றி உணராமல் இருப்பது ஆபத்தானது. உலகத்தினுடைய வெப்பநிலை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் மாறாமலேயே இருந்திருக்கிறது.

பல நூறுகோடி ஆண்டுகள் தாக்குப்பிடித்த இவ்வுலகம், கடந்த 100 முதல் 200 ஆண்டுகளில் மனிதர்களால் உருவாக்கப்பட்ட மாற்றங்களால் பெரும் பாதிப்புக்கு ஆளாகிறது.

**துபாய் காலநிலை மாற்ற மாநாடு:**

காலநிலை மாற்றத்திற்கான நிதியுதவி மற்றும் பூமியிலிருந்து கிடைக்கும் எரிபொருள் பயன்பாட்டினை கட்டுப்படுத்துதல் போன்றவை முதன்மையான கருத்தாக முன்வைக்கப்பட்டு துபாயில் நடைபெறும் காலநிலை மாற்றம் மாநாட்டில் பேசப்பட உள்ளது

துபாயில் நடைபெறும் 28வது உலக காலநிலை மாற்றத்துக்கான மாநாட்டில் உலகின் பல நாடுகளில் நடந்த இயற்கை பேரழிவு, காட்டு தீ, அதிகரித்த




பூமியின் வெப்பம் போன்றவை குறித்தும் கலந்துரையாடல் நடைபெற உள்ளது.

கடந்த 100 ஆண்டுகளில் அதிகரித்த மக்கள்தொகை, மக்கள்தொகைக்கு ஏற்ப அதிகரிக்கும் உணவு உற்பத்திகள், மாமிசம், பால் வகைகள் மற்றும் ராக்கெட் வேகத்தில் அதிகரித்து வரும் வாகன உற்பத்திகள், அவற்றை இயக்க பயன்படும் எரிபொருட்களான பெட்ரோல், டீசல், நிலக்கரி ஆகியவற்றால் ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்பு பருவநிலைகளை மாற்றியமைக்கிறது.

உலகத் தலைவர்கள், மாநில பிரதிநிதிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் கல்வியாளர்கள் பங்கேற்கும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு (கோப் 28) நவம்பர் 30 ஆம் தேதி துபாயில் உள்ள எக்ஸ்போ சிட்டியில் தொடங்கியது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் மூன்று நிகழ்ச்சிகளில் இந்தியப் பிரதமர் மோடியும் கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸ் என 70 ஆயிரம் பேர் பங்கேற்றார்கள் எனக் கூறப் படுகிறது.

காலநிலை மாற்றம் மற்றும் நாடுகள் அதை எவ்வாறு சமாளிக்க திட்டமிட்டுள்ளன என்பது குறித்த உரையாட லுக்கான முன்னணி சர்வதேச தளமாக காலநிலை மாற்ற உச்சிமாநாடு செயல்படுகிறது.

மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு உடன்பாட்டில் இணைந்துள்ள உறுப்பு நாடுகளிடையே, காலநிலை மாற்றம் குறித்த கலந்துரையாடல்களை வழிநடத்துவதில் இந்த மாநாடு முக்கிய பங்கு வகிக்கிறது.

மாற்றத்திற்கான கூட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவ தற்காக அனைத்து பங்குதாரர்களுக்கும் புதிய, சமமான தீர்வுகளுக்கு பங்களிப்பைப் பெறுவதும், சமமான வாய்ப்புகளை வழங்குவதும் இந்த மாநாட்டின் குறிக் கோளாகும்.

உலகளவில் நிலையான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியைப் பேணுவதற்கும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கும் அனைத்து உறுப்பு நாடுகளின் கூட்டு அர்ப்பணிப்பின் முக்கியத்து வத்தையும் இந்த மாநாட்டில் வலியுறுத்தப்படுகிறது.

**நிலக்கரி குறைப்பில் இந்தியாவின் நிலை:**

இந்த ஆண்டு நடைபெறும் மாநாடு குறித்து இந்திய வெளியுறவு செயலாளர் வினய் மோகன் குவாத்ராச, எரிசக்தி தேவைக்காக நிலக்கரி பங்கை குறைப்பதில் இந்தியாவின் நிலைப்பாடு பற்றிய தன் கருத்தை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் எரிசக்தி தேவையில் எப்போதும் நிலக்கரி முக்கியத்துவமான தாகும். நாட்டின் வளர்ச்சிக்கு தேவையானவற்றிற்றை பூர்த்தி செய்ய இந்தியா முயற்சித்து வருகிறது. நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய காலநிலை மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் வளர்ச்சி பசுமையானதாக இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

2021ஆம் ஆண்டு நடைபெற்ற கோப் 26 இயற்றப்பட்ட ஐந்து 'பஞ்சமிர்த' கொள்கைக்கு பிரதமர் மோடி உறுதியளித்திருந்தார். மின்சார தேவையில் பாதியை புதுப்பிக்கத் தக்க சக்திகளில் இருந்து பெறுவது, 2030 ஆம் ஆண்டுக்குள் 1 பில்லியன் தொன் கார்பன் உமிழ்வைக் குறைப்பது உள்ளிட்ட ஐந்து கொள்கைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்திருந்தார்.

**சர்வதேச ஒத்துழைப்பும் பங்களிப்பும் :**

காலநிலை மாற்றத்தை கையாள்வதில் ஐக்கிய அரபு இராச்சியம் அதன் அர்ப்பணிப்பை வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புக்களை சமாளிப்பதில் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பின் காலநிலை மாற்ற மாநாடு 1995ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு வருடமும் நடக்கும் மாநாட்டில் உலகத் தலைவர்கள், அரசாங்க பிரதிநிதிகள் பங்கேற்று, பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப மேற்கொள்ள




வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், அதைச் செயல்படுத்துவதற்குப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு நிதி உதவி வழங்குவது சம்பந்தமாகவும் விவாதிப்பார்கள்.

உலகில் பல்வேறு நாடுகளிலும் படிம எரிபொருட்களை எரிப்பதன் மூலம் தான் தங்களுக்கு தேவையான சக்தி பெறப்படுகிறது. இவ்வாறு படிம எரிபொருட்களை எரிப்பதன் மூலம் அதிகளவு கார்பன் உமிழ்வு நிகழ்கிறது.

காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் இந்த மாநாட்டில் படிம எரிபொருட்கள் பயன்பாட்டிற்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என கருதப்படுகிறது. முந்தைய மாநாடுகளிம் இதுபோன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இருந்தன.

இந்த மாநாட்டில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தேவையான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். அதில், அதிகளவு கார்பன் உமிழ்வை வெளியிடும் வளர்ந்த நாடுகள், பொருளாதார நிலையில் பின்தங்கிய நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் தேவையான நிதியுதவியை வழங்கும் என கருதப்படுகிறது.

ஆயினும் பாலஸ்தீன - இஸ்ரேல் மோதலும், தொடரும் உக்ரேனிய யுத்தமும் உலகை இரு கூறுகளாக பிளவுபடுத்தி வைத்துள்ளது. தொடரும்

போர் பகைமையில் உலகின் துயர் துடைக்கப்பட்டு, ஒரு சிறந்த மாசற்ற பூமியை உருவாக்குவதை நோக்கிய முடிவுகள் இந்த மாநாட்டில் எடுக்கப்பட்டாலும், அதனை நடைமுறைப்படுத்தும் சாத்தியங்கள் வெகு கடினமாகவே இருக்கும்.






# ஊழல் மோசடி இல்லாத விமலை குழு உறுப்பினராக நியமிக்கலாம்

## அமைச்சர் காஞ்சன யோசனை

கொழும்பு, டிசெ. 10

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான குழுவில் ஊழல் மோசடியுடன் நெருக்கமான தொடர்புகொண்டிருந்தவர் உறுப்பினராக செயற்பட்டுள்ளார். இவ்வாறான நிலையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ கேள்வியெழுப்பினார்.

ஊழல் மோசடி இல்லாத விமல் வீரவன்ஸவை அடுத்த முறை குழுவின் உறுப்பினராக நாங்கள் நியமிக்கிறோம் என மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற அமர்வின்போது மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பில் மின்சாரத்றை அமைச்சர் காஞ்சன விஜேசேகர விசேட கூற்றை முன்வைத்தார். இதனை தொடர்ந்து எழுந்து உரையாற்றிய தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ,

மின்சார சபையின் ஊழல் மோசடியை இல்லாதொழிக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மின்சார சபையின் ஊழலை இல்லாதொழிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவில் ஊழல் மோசடிக்கு துணைபோனவர் உறுப்பினராக செயற்பட்டுள்ளார். இவ்வாறான நிலையில் எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும்?

ஊழலுடன் நெருக்கமான இவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சியில் அரச நிர்வாகத்தில் இருந்தார். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மகிந்த தோல்வியடைந்ததன் பின்னர், அவுஸ்திரேலியாவுக்கு சென்று தலைமறைவானார். இவருக்கு அவுஸ்திரேலியாவில் பல வீடுகள் உள்ளன.

2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் மீண்டும் இலங்கைக்கு வந்தார். மின்சார சபையின் உயர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது. இவ்வாறான ஊழல்வாதிகளை மறுசீரமைப்பு குழுவுக்கு நியமிக்கும்போது முன்வைக்கப்படும் பரிந்துரைகள் எவ்வாறு நேர்மையானதாக இருக்கும்-என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் காஞ்சன விஜேசேகர, ஊழலுக்கு துணை போகாத, ஊழல் மோசடி இல்லாத விமல் வீரவன்ஸவை அடுத்த முறை குழுவின் உறுப்பினராக நியமிக்கிறோம்-என்றார்.(அ)

# மஹவ-ஓமந்தை ரயில் பாதையை நவீனமயப்படுத்துவதற்கு திட்டம்

## ஜனவரி முதல் மூடப்படும்

கொழும்பு, டிசெ. 10

வடக்கு ரயில் மார்க்கத்தின் மஹவ மற்றும் ஓமந்தை வரையிலான ரயில் பாதையை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் மஹவ முதல் அனுராதபுரம் வரையிலான பகுதியை நவீனமயப்படுத்துவதற்காக ஜனவரி மாதம் 7 ஆம் திகதி முதல் 6 மாத காலத்திற்கு ரயில் பாதை மூடப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, அக்காலப்பகுதியில் கொழும்பில் இருந்து மஹவ வரையிலும் அனுராதபுரத்திலிருந்து காங்கசன்துறை வரையிலும் இரு திசைகளிலும் ரயில் சேவைகள் இடம்பெறும் என ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ஜே.வி.பியின்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேனவை ஜே.வி.பி. ஆதரித்தது.

இறுதியாக நடைபெற்ற 2019 ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்சவை எதிர்த்து ஜே.வி.பி.யின் புதிய அவதாரமான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக அநுரா குமார திசாநாயக்க போட்டியிட்டு 418,533 ( 3.16 சதவீதம் ) வாக்குகளைப் பெற்றார்.

பாராளுமன்ற தேர்தல்களைப் பொறுத்தவரை, ஜே.வி.பி. முதற்தடவையாக 1994 ஆகஸ்ட் தேர்தலில் போட்டியிட்டு மொத்தம் 90,078 (1.13 சதவீதம்) வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தை வென்றெடுத்தது. 2000 பாராளுமன்ற தேர்த லில் அந்த கட்சிக்கு 518, 774 (6.00 சதவீதம்) வாக்கு கள் கிடைத்து பத்து ஆசனங்களைக் கைப்பற்றக்கூடியதாக இருந்தது.

2001 டிசம்பர் பாராளுமன்ற தேர்த லில் 815, 353 (9.10 சதவீதம்) வாக்குக ளைப் பெற்ற ஜே.வி.பி. 16 ஆசனங்களை தனதாக்கிக்கொண்டது.

2004 ஏப்ரில் பாராளுமன்ற தேர்த லில் சுதந்திர கட்சியுடன் இணைந்து அமைத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூலமாக போட்டியிட்டு 4,223, 970 (45.60 சதவீதம் ) வாக்குகளைப் பெற்ற ஜே.வி.பி. 39 ஆசனங்களைக் கைப்பற்றியது. இதுவே அந்த கட்சிக்கு அதன் வரலாற்றில் கிடைத்த அதிகூடிய எண்ணிக்கை ஆசனங்களாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டிருக்காவிட்டால் அவ் வாறு பெருமளவு ஆசனங்களை ஒரு போதும் ஜே.வி.பி.யினால் கைப்பற்றி யிருக்க முடியாது. அதை பிறகு வந்த தேர்தல்கள் தெளிவாக நிரூபித்தன.

2010 ஏப்ரில் பாராளுமன்ற தேர்தலில் 441, 251 (5.49 சதவீதம்) வாங்குகளைப் பெற்று 4 உறுப்பினர்களுடன் மாத்திரமே ஜே.வி.பி. பாராளுமன்றத்துக்கு வந்தது. மீண்டும் 2015 ஆகஸ்ட் பாராளு மன்ற தேர்தலில் 553,994 (4.87 சதவீதம்) வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களை யும் இறுதியாக 2020 ஆகஸ்ட் பாராளு மன்ற தேர்தலில் 445, 958 (3.84 சதவீதம்) வாக்குகளுடன் 3 ஆசனங்களையும் ஜே.வி.பி. கைப்பற்றியது.

இந்த விபரங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இரு சந்தர்ப்பங்களை தவிர மற்றும்படி ஜே.வி.பி. சராசரியாக 3 இலட்சத்துக்கும் 5 இலட்சத்துக்கும் இடைப்பட்ட எண் ணிக்கையில் வாக்கு வங்கியை கொண்டதாக இருந்து வந்திருப்பதை காண முடியும்.

அத்தகைய ஒரு நிலையில் இருந்து ஜனாதிபதி தேர்தலில் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறக் கூடிய அளவுக்கு ஜே.வி.பி.- தேசிய மக்கள் சக்தியை நாட்டு மக்கள் ஆதரிக்கப்போகிறார்களா? திசாநாயக்க கூறிய சமூக அறி வியல் அத்தகைய பிரமாண்ட மான மாற்றம் ஒன்றை அடுத்த வருடம் ஏற்படுத்தப் போகிறதா?

ஜனாதிபதி தேர்தல்களில் எத்தனை பேர் போட்டியிட்டாலும், இறுதியில் இரு பிரதான வேட்பாளர்களுக்கும் இடையிலேயே உண்மையான போட்டி இருக்கும். மூன்றாவது வேட்பாளரும் அவருக்கு பின்னால் வருபவர்களும் பொருட்படுத்தக்கூடிய அளவுக்கு வாக்குகளை பெறுவதில்லை. ஜே.வி.பி. அவ்வாறான ஒரு கட்சியாக இருந்து வந்ததை கண்டதே இதுவரையான எமது அனுபவமாக இருக்கிறது.

ஆனால், கருத்துக் கணிப்புக்களின் அடிப்படையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பிரதான வேட்பாளர்களில் ஒருவராக திசாநாயக்க விளங்கப்போவதாக கூறப்படுகின்ற நிலையில் ஜே.வி.பி.- தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டை அதன் கடந்த கால செயற்பாடுகளின் அடிப்படையில் இனிமேலும் மதிப்பிடுவது பொருத்தமானதாக இருக்காது.

திசாநாயக்க ஜனாதிபதியாக வருவாரா இல்லையா என்பது வேறு விடயம். ஆனால் அடுத்த தேசிய தேர்தல்களுக்கு பிறகு இலங்கையின் அரசியல் கோலங்களில் பாரிய மாறுதல்களைக் காணக்கூடியதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# ஏரிப் படுக்கைகளில்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊரறிந்த ரகசியம் இதுதான். சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளான செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஒரு காலத்தில் ஏராளமான நீர் நிலைகள் இருந்தன. நிலத்தடி நீரைப் பராமரிக்க மழை நீரைத் தேக்கி வைக்கும் நீர்த்தேக்கங்களாகவும் இப்பிராந்தியத்தின் பசுமைப் போர்வையைத் தக்கவைத்துச் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் அரண்களாகவும் இவை இருந்தன.

சென்னை விரிவடைய அடைய, அதன் பெருகும் மக்கள் தொகையைக் கொள்ளவும், மற்ற மாவட்டங்களிலிருந்தும் வட மாநிலங்களிலிருந்தும் புலம்பெயர்ந்து வருபவர்களுக்கு இடமளிக்கவும் சென்னைப் பெருநகர மாநகராட்சி தனது எல்லைகளை விரிவாக்கிக் கொண்டே வந்தது. புறநகர்ப் பகுதிகளில் உருவான குடியிருப்புகள் காலப்போக்கில் நகர்ப்புறங்களாகவே மாறிவிட்டன. இதில், றியல் எஸ்டேட் வர்த்தகர்கள், ஊழல் அரசியல்வாதிகள் மற்றும் நேர்மையற்ற அதிகாரிகளின் கூட்டு முயற்சிக்குப் பெரும்பங்கு உண்டு. இருந்த நீர்நிலைகளில் மண்ணையும் கல்லையும் இட்டு நிரப்பி, அங்கு குடியிருப்புகளை உ வாக்கிக் காசு பார்த்தார் கள். நடுத்தர மக்களின் சொந்த வீட்டுக் கனவை நனவாக்கும் போர்வையிலும் வாடகைக்கான வீடுகளைப் பெருக்கவும் வங்கிகளும் இதில் களமிறங்கி எளிய கடன்களைப் போட்டி போட்டுக்கொண்டு, குறைந்த வட்டியில் வாரி வழங்கின. அதன் பலன், மனிதன் இயற்கையைச் சூறையாடினான். பதிலுக்கு இயற்கை ஒவ்வொரு பருவ மழைக் காலத்திலும் மனிதனைச் சூறையாடுகிறது. நான் ஏற்கெனவே இதைச் சொல்லியிருக்கிறேன். ஆனால், மீண்டும் சொல்லத் தயக்கமில்லை. மடித்த வேட்டி அரசியல்வாதிகளையும் ஆழமான ஜேபிகளைக் கொண்ட அதிகாரிகளை யும் குற்றம் சொல்வதில் எந்தப் பலனும் இல்லை. பல்லாண்டு காலங்களாக நம்மைச் சுற்றி நடக்கும் இத்தகைய முறையற்ற செயல்களைக் கண்டும் காணாததுபோல் அமைதி காக்கும் நாம்தான் குற்ற வாளிகள்.

உங்கள் பார்வைக்குச் சில படங்களை அனுப்பியிருக்கிறேன். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இனிய வார இறுதி நாளுக்குத் தயாராகுங் கள். உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் வாழும் இலங் கைத் தமிழர் சமுதாயத்தின் தலைவர்கள், சிங்கள அரசியல் மற்றும் மதத் தலைவர்களுடன் இணைந்து, எழில் கொஞ்சும் நமது இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் மறு கட்ட மைப்புக்கு உழைக்க தற்போது முனைந்துள்ளனர். கட வுள் உங்களுக்குத் துணை நிற்பார், எப்பொழுதும்.

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்.

# இலங்கைப்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்துறைக்கான கற்பித்தல் மொழியாக தமிழைக் கோருவோர் எந்த ஆய்வுப் பெறுபேறுகளின் அடிப்படையில் அந்த முடிவுக்கு வந்தனர்? இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக தென்பகுதியிலுள்ள பல்கலைக்கழக ஆசிரியர்களும், துறைசார் வல்லுநர்களும் அன்றாடம் சிங்கள, ஆங்கில நாளிதழ்களில் எழுதி வருவது போல இங்குள்ள எத்தனை பேர் அவ்வாறு எழுதி வருகின்றனர்? இத்தகைய பலவீனமான நிலையில் நாம் இருந்த கொண்டு தமிழ்மொழிக் கற்பித்தலுக்குக் கோரிக்கை விடுவது எவ்வளவு நன்மை தரும்?

இக்கோரிக்கையின் பின்னால் இருக்கக் கூடிய நியாயமான காரணங்கள் இரண்டு உள்ளன.

1. மாணவர்க்கு வேண்டிய ஆங்கில அறிவை மேம்படுத்தல்.

2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழருக்கானது என்ற தனித்தவத்தை உறுதிப் படுத்துதல்.

சட்ட மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கு அடிப்படை மற்றும் சட்டம் சார் ஆங்கில மொழி வகுப்புகள், பயிற்சிகளுக்கான விசேட நடைமுறைகளை மேற்கொள்ளலாம். இதில் மாணவர்களின் முயற்சியே முக்கியமானது. இதற்கு மேலாக முதலாம், இரண்டாம் வருடங்களில் இரு மொழிக் கற்பித்தல் முறையை பின்பற்றலாம். இதில் இருக்கக் கூடிய விரும்பத் தகாத விளைவு சிங்கள மாணவர்க்கும் இரு மொழிக் கற்பித்தலுக்கு சிங்கள விரிவுரையாளர்கள் இங்கு நியமிக்கப்பட வேண்டியேற்படும். இதேபோல தமிழ் மொழிக்கு தனித்த பிரிவு உருவாக்கப்டும் போது சிங்கள மொழிக்கும் இங்கு தனித்த பிரிவொன்றை உருவாக்க அரசு முனைந்தால் இன்னும் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புண்டு.

இரண்டாவது விடயம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் எந்தப் பீடத்திலும் அல்லது துறையிலும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைவிட குறைவாக சிங்கள மாணவர்களின் எண்ணிக்கையைப் பேணுவதற்கான ஒரு ஏற்பாடு. இது அரசியல் சார்ந்த ஒரு விடயம். அரசியல் தலைவர்கள் இதனை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். ஆனால் இதிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பெரிய பிரச்சினையை எதிர் நோக்குகிறது. இங்கு சில துறைகளில் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை உயர்வதற்கான பிரதான காரணம் போதியளவு தமிழ் மாணவர்கள் அத்துறைகளுக்கு விண்ணப்பிப்பதில்லை என்பதனாலாகும். இதற்கு மிகப்பிந்திய உதாரணம் யாழ் பல்லகலைக் கழகத்தின் பொறியியல் பீடத்துக்கு யாழ் மாவட்டத்திலிருந்து எவரும் விண்ணப்பிக்கவில்லை என்பது. இவ்வாறான ஒரு நிலையில் மொழிமூல மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது சாத்தியமான ஒன்றா எனச் சிந்திக்க வேண்டும்.

தமிழருக்கான தனித்துவமான ஒரு பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்லகலைக்கழகத்தை தொடர்ந்து நாம் வைத்திருக்க வேண்டுமானால் வெறும் கோசங்களுக்குப் பதிலாக தமிழ் மக்களிடையே அது தொடர்பான விழிப்பும் மனமாற்றமும் ஏற்படுவது அவசியம்.

## கோட்டாவை....

தெரிவித்தனர்.

இது குறித்து நேற்று யாழ்ப்பாணம்உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவிக்கையில்-

இந்த நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியவர் அத்தோடு அரசியல் ரீதியில் பெரும் பின்னடைவினை ஏற்படுத்தியவர். சர்வதேச சட்டங்களை மதிக்காது செயற்பட்டவர். நாட்டில் ஜனாதிபதி பதவியில் இருக்கும்போது மக்களின் எதிர்ப்பினால் தப்பி ஓடியவர் என்பதன் அடிப்படையில் அவரை சந்தித்து பிரயோசனம் இல்லை.

ஆனால் நாங்கள் ஏனைய அனைத்து அரசியல் தரப்பினரையும் சந்தித்து எமது நிலைப்பாட்டை விளக்குவோம்-என்றார். (அ)

## தலைநகரில்....

மீண்டும் மின்சாரம் வரும் என்று ஒரு பத்து நிமிடம் காத்திருந்தபோது நாடுபூராவும் மின்சாரம் தடைப்பட்டிருப்பதாக தெரியவந்தது.

காத்திருப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்து மாலை வேளையின் மங்கல் வெளிச்சத்தில் நிகழ்வை தொடருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

பக்கத்தில் நின்று ஆட்கள் மாறிமாறி கைத்தொலைபேசி வெளிச்சத்தைப் பாய்ச்சிக்கொண்டிருக்க பேச்சாளர்கள் உரைகளை நிகழ்த்தினார்கள். அவ்வாறே அந்த வெளிச்சத்திலேயே நூல் பிரதிகளும் பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டன.

சபையோரில் பலரும் தங்கள் கைத்தொலைபேசிகளை ஒளிரவிடடுக்கொண்டிருந்தனர். நிகழ்ச்சி நிரலில் முழுமையாக நிறைவேற்றப்பட்டது.

கைத்தொலைபேசி வெளிச்சத்தில் முழுமையாக நடைபெற்ற முதல் நூல்வெளியீட்டு நிகழ்வு இதுவாகவே இருக்கலாம். (அ)

## தமிழ்மக்களுக்கு....

தெரியவில்லை. உங்களைப்போல் பலர் இங்கே வருகை தந்து சந்திப்புகளை மேற்கொள்கின்றார்கள். அவ்வாறே போய்விடுவார்கள். ஆனால் எந்த முடிவோ எந்த தீர்வும் எட்டப்படுவதில்லை.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட நீங்கள் இருக்கும் கதிரையில் இருந்து என்னிடம் பல பிரச்னைகளை கேட்டறிந்தார். நாங்களும் பல விடயங்களை கூறினோம். அவ்வாறே போய்விட்டார். எந்த தீர்வும் கிடைக்கவில்லை. குறிப்பாக திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் திருப்பணிவேலைகளை செய்ய முடியாதுள்ளது. அங்கே பல இடர்பாடுகள் தொல்பொருள் திணைக் களத்தினரால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதேபோல காங்கேசன்துறை பகுதியை எடுத்துக்கொண்டால் எங்களுடைய சித்தர்கள் இருந்த இடங்கள், சமாதிகளை இடித்து-புராதன கோவில்களை இடித்து ஜனாதிபதி மாளிகையினை கட்டிவிட்டு இன்று அந்த இடத்தை வேறு யாருக்கோ விற்க முற்படுகிறார்கள். இது எல்லாம் பிழையான விடயம் தானே. ஏனென்றால் முதலில் இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காணும்போது தான் எமக்கு ஒரு நம்பிக்கை வரும்.

தமிழ் மக்களுக்கு தீர்வினை பெற்று தருவீர்கள் என்று இந்த விடயத்தை உடனடியாக கருத்தில் செயல்படுத்த நீங்கள் முன் வாருங்கள் பார்ப்போம். அதேபோல இந்த பிரச்னை தொடர்பில் அஸ்கிரிய பீடத்தினர்கூட இங்கே வருகை தந்து ஆதினத்தை சந்தித்த போது பல விடயங்களை எடுத்துரைத்தோம்.

ஆனால் அவை காற்றில் போய் விட்டது. அதேபோல நீங்களும் போகக் கூடாதுக். நீங்களும் இந்த விடயங்களை கருத்தில் எடுத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

## படகு சேவை....

இயங்கவில்லை என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அத்துடன், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக இலங்கை 570 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்-

எங்களால் ஒரு கையால் கைதட்ட முடியாது. படகு போக்குவரத்திற்கு இந்தியாவின் ஆதரவு அவசியம். படகுகளை வழங்குவதனை இந்தியா ஏற்றுக்கொண்டது. ஆனால், இந்த விடயத்தில் சிறிது தாமதமாக உள்ளது.

அத்துடன், துறைமுகம் மற்றும் விமான நிலையத்தை அரசின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பது அவசியம்.

கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் மேலும் 04 கொள்கலன் முனையங்களை அமைக்க முடியும்.

குறித்த கொள்கலன் முனையங்கலில் முதலீடு செய்வதற்கு தனியார் துறையை ஊக்குவிக்க வேண்டும்-என்றார். (அ)

## பாராளு...

வரும் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதம் எதிர்வரும் 13 ஆம் திகதி முடிவடைய உள்ளது. இதன் பின்னர் எதிர்வரும் ஜனவரி 9 ஆம் திகதி பாராளுமன்றம் கூட்டப்படவுள்ளது.

ஜனவரி 9 ஆம் திகதி ஆரம்பமாகும் பாராளுமன்ற வாரத்தில் அரசாங்கம் அவசரமாக சட்டமூலங்களை நிறைவேற்ற தயாராகி வருவதாக கூறப்படுகிறது.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலத்தை எதிர்வரும் 11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பேசப்படுகிறது.

இதனையடுத்து ஜனவரி மாதம் நடுப்பகுதியில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்குள், அரசியலமைப்புச் சட்டப்படி பாராளுமன்றத்தில் புதிய கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதனடிப்படையில், தற்போதைய கூட்டத் தொடர் நிறைவு செய்யப்பட்டால், எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத நடுப்பகுதியில் பாராளுமன்றம் கலைக்கப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சில சந்தர்பங்களில் கூறியிருந்தார். இதன்படி வருட ஆரம்பத்தில் பொதுத் தேர்தலை நடத்திய பின்னர், ஜனாதிபதி தேர்தலை நடத்த தயாராகி வருவதாக தெரியவருகிறது.

“நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை வெற்றிக்கொள்ள நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம்” என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த நிலையில்,எதிர்வரும் பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசியக்கட்சியுடன் சம்பந்தப்பட்ட சிலர், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளை சேர்ந்தவர்களுடன் இணைந்து மக்கள் ஆணையை பெற்று அரசாங்கத்தை அமைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட உயர் மட்ட தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# “இலங்கை மின்சாரத்துறையை தனியார் மயமாக்க இடமில்லை”

கொழும்பு, டிசெ. 10

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களில் சில மறுசீரமைப்புகள் இடம்பெற வேண்டுமானாலும் மின்சார உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் போன்ற துறைகளில் இடம்பெறும் மாற்றங்கள் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு சாதகமாக அமைய வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மின்சாரத்துறையானது தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் விடயமாக உள்ளதால் இதனை தனியார்மயப்படுத்த இடமளிக்க மாட்டோம் என்றும் அவர் கூறினார்.

மின்சாரத்துறையை தனியார் மயமாக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் பின்புலத்தில் இது தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

## இருளில்....

கொழும்பு மற்றும் தென் மாகாணத்தின் பல பகுதிகளில் நேற்றிரவு மின் விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் அதனைச் சூழவுள்ள பல பகுதிகள் மற்றும் தென் மாகாணத்தில் மின்சார விநியோகம் வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார்.

ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் மின்சாரத்தை மீட்டெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

நேற்று மாலை கொத்மலையில் இருந்து பியகம வரையிலான மின் விநியோக பாதையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாடளாவிய ரீதியில் பெரும் மின் தடை ஏற்பட் டுள்ளதாக தெரிவிகப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்ட திடீர் மின் தடை காரணமாக நீர் விநியோகமும் தடைப்பட்டுள்ளது.

இவ்வாறாயினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது அத்தியாவசியமான இடங்களுக்கு பவுஸர் மூலம் நீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, நாடு முழுவதும் நிலவும் மின்வெட்டு காரணமாக அனைத்து பொலிஸ் நிலையங்களுக் கும் சிறப்பு அறிவிப்பு விடுக்கப்பட் டுள்ளது.

இதன்படி, பாதுகாப்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மக்களின் பாதுகாப்பு தொடர்பில் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

## பிரபாகரனை....

சுரேந்திரன் யாழ்ப்பாணத்தில் கூறினார்.

இது குறித்து யாழ்ப்பாணத்தில் அவர் தெரிவிக்கையில்-

இலங்கையில் பல்வேறுபட்ட தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தோம். அதேபோல சர்வமத தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடி இருந்தோம்.

அவர்களை சந்தித்து தமிழ் மக்களுடைய பிரச்னைக்கு அரசியல் தீர்வு வேண்டும் என்ற விடயத்தையும், போர்க் குற்றங்களுக்கு பொறுப்பு கூறல் ஒரு முக்கியமான விடயம் என்றும், வெளிநாடுகளின் பிரேரணைகளை நிறைவேற்ற வேண்டியது ஒரு முக்கியமான விடயம் என்பது போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பிரேரணையொன்றை ஜனாதிபதி மற்றும் ஏனையோரிடம் கையளித்திருக்கின்றோம்.

மதகுருமார்களுடன் ஒன்று சேர்ந்து 25 மாவட்டங்களுக்கு சென்று இந்த பிரச்னைகளுக்கு தீர்வை ஒன்றிணைந்து கொண்டுவர வேண்டும் என்பதுதான் எங்களது அடிப்படை நோக்கம் ஆகும்.

அரசியல்வாதிகளை சந்திப்பதன் நோக்கம், அரசியல்வாதிகளுக்கு இப்படியான வேலை திட்டத்தை நாங்கள் செய்கின்றோம் என்பதனை வெளிப்படையாக கூற வேண்டும் என்பதற்காகவே. இது தொடர்பில் குறை கூறாது அவர்கள் செயல்பட வேண்டும்.

குறிப்பாக அரசாங்கத்தினுடைய வேலை திட்டம் அல்லது பௌத்தர்களுடைய வேலை திட்டம் என குறை கூறக்கூடாது என்பதற்காக நாங்கள் அரசியல்வாதிகளுக்கும் திட்டத்தினை தெளிவாக கூறுவோம்.

பிரச்சினைகளை மக்கள் மயப்படுத்துவதே எமது நோக்கம். மக்களே தீர்ப்பு கூறவேண்டும் என்பதே எமது நோக்கம். அரசியல்வாதிகள் குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளையும் சந்திக்கவுள்ளோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை தவிர ஏனையோரை சந்திக்கவுள்ளோம்.

பலதரப்பட்ட சமூகத்தினரை சந்தித்து எமது வேலை திட்டத்தினை மக்கள் மயப்படுத்தி மக்கள் மத்தியில் இருந்து பிரச்னைக்கான நிரந்தர தீர்வை காண முற்படுகிறோம்.

அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரை நாங்கள் சந்தித்தபோது பல விடயங்களை அவர் கூறினர். சகோதரத்துவம், சமதர்மம், சமாதானம் என்ற அடிப்படையில் பணியாற்றினால் இலங்கையில் பிரச்னைகள் இருக்காது என அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் கூறினார்.

அரசியல்வாதிகள் இவ்வாறு செய்வதில்லை. நீங்கள் மக்களிடம் செல்லப்பேபாவதை வரவேற்பதாகவும் நிச்சயமாக உறுதுணையாக இருப்போம் எனவும் அதனைத் தாம் வெளிப்படை யாகவே கூறுவதாகவும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் தெரிவித்தார்.

மல்வத்துபீட மகாநாயக்க தேரர் , போர்க்காலத்தில் கூட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை சந்திப்பதற்காக ஆறு தடவை அப்போதைய அரசாங்கங்களிடம் கோரிக்கை விடுத்ததாகவும், அரசாங்கம் இதற்கு ஏற்பாடுகளை செய் யாத சூழலில் ஆறாவது தடவையாக தான் வவுனியா வரை பிரபாகரனை காண வேண்டும் என்று சென்றேன். ஆனால் அது கைகூடவில்லை எனக் கூறினார - என்றார். (அ)

## புதிய....

கிரிக்கெட்டில் இடம்பெற்றுள்ள மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளுக்கு தெரியப்படுத்த சென்றபோதே அர்ஜுன ரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

கிரிக்கெட் நிர்வாகத்திற்கு வருவதற்கு அர்ஜுன ரணதுங்க பல தடவைகள் முயற்சித்தும் அது தோல்வியடைந்ததுடன், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் நியமிக்கப்பட்ட இடைக்கால கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுவின் தலைவராக அவர் நியமிக்கப்பட்ட போதும் நீதிமன்ற உத்தரவின் காரணமாக அதன் செயற்பாடுகளை அவரால் ஆரம்பிக்க முடியவில்லை. (அ)

ஈழநாடு Eelanadu

# வற் வரி குறித்து இன்று விவாதம்!

கொழும்பு, டிசெ. 10

வற் எனப்படும் பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்காக பாராளுமன்றம் இன்று கூடவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி பாராளுமன்ற அலுவல்கள் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய, குறித்த விவாதம் இன்று முற்பகல் 9.30 முதல் மாலை 4.30 வரை நடைபெறவுள்ளது.(அ)

## வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் கோரும் எம்.பிக்கள்!

கொழும்பு, டிசெ. 10

சுங்க வரி இன்றி வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குமாறு கோரி சுமார் 50 பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் மற்றும் அரசாங்கத்திடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

நாட்டின் பொருளாதார நிலைமையானது தற்போது ஓரளவுக்கு சீராகி இருப்பதால்,தமது கோரிக்கையை நிறைவேற்றுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

அதேவேளை மேலும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் சேவை பிரிவிலும் விசாரித்துள்ளனர்.

வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களை கோரியுள்ள இந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பதுடன் தமக்கு சொந்தமான வாகனங்கள் எதுவுமில்லை என அவர்கள் கூறியுள்ளனர்.

அடுத்தாண்டு சில தேர்தல்கள் நடத்தப்பட உள்ளதால், அதற்கு பயன்படுத்த வாகனம் அவசியம் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனிடையே தமக்கு வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கினால்,மாத்திரமே வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவளிக்க முடியும் என மேலும் சிலர் அரசாங்கத்திடம் கூறியுள்ளனர்.

எது எப்படி இருந்தபோதிலும் சுங்க வரி இன்றி வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவது சம்பந்தமான அரசாங்கம் இதுவரை இறுதி முடிவு எதனையும் எடுக்கவில்லை. (அ)

# இனப்பிரச்னை தீர்வுக்கு எம்மால் தடையில்லை!

## அஸ்கிரிய, மல்வத்து பீடாதிபதிகள் உலகத்தமிழர் பேரவையிடம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 10

**நாட்டில் இனப்பிரச்னை உட்பட அனைத்துவிதமான பிரச்னைகளும் நீடித்துக்கொண்டிருப்பதற்கு பௌத்த தேரர்களே காரணமாக உள்ளனர் என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள நிலையில் நிரந்தரமான சமாதனம் ஏற்படுவதற்கு நாம் எப்போது தடைகளை ஏற்படுத்தவில்லை. அனைத்து மக்களும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஊடாகத் தீர்க்கப்படவேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன தேரர் மற்றும் மல்வத்துபீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரர் உலகத்தமிழர் பேரவையிடம் கூட்டாக தெரிவித்துள்ளனர்.**

பௌத்த தேரர்கள் ஒருங்கிணைந்த சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் நேற்று முன் தினம் காலை கண்டிக்கு விஜயம் மேற்கொண்டதோடு, அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடல்களில் கலந்துகொண்டனர் .

இந்தச் சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

முதலில் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கத் தேரர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன தேரரை குறித்த குழுவினர் சந்தித்தனர். இதன்போது இமயமலைப் பிரகடனம் அவரிடத்தில் கையளிக்கப்பட்டதோடு, அதனடிப்படையில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டம் சம்பந்தமாக தெளிவுபடுத்தப்பட்டது.

அச்சமயத்தில் நிறைவேற்றப்பட்ட இமயமலைப் பிரகடனத்தை தான் ஏற்கனவே அறிந்திருப்பதாக தெரிவித்த மகாநாயக்க தேரர், குறித்த பிரகடனம் மக்களிடையே பிரசாரம் செய்யப்பட்டு உரிய கலந்துரையாடல்கள் பரந்துபட்ட அளவில் செய்யப்பட்டு மக்களுக்கு இடையிலான பிரச்சினைகள் மக்களின் பங்கேற்புடனேயே தீர்க்கப்படவேண்டும். அதன் மூலமாகவே நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியும் அத்தோடு, நான், சகோதரத்துவம், சமாதானம், சமத்துவம் என்ற நடைமுறையில் இருக்க வேண்டும் என்பதையே தொடர்ச்சியாக விரும்புகின்றேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்துரூபவ் மல்வத்து பீடத்துக்குச் சென்ற குறித்த குழுவினர், மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரைச் சந்தித்து உரையாடினார்கள்.

இதன்போது, நாட்டில் காணப்படுகின்ற பல பிரச்னைகளை கலந்துரையாடல் மூலமாக தீர்க்கமுடியும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

போர்க் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பதற்கு அரசாங்கத்திடம் பல தடவைகள் கேட்டிருந்தேன். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பல முயற்சிகளை எடுத்திருந்தேன். எனினும் அவை கைகூடியிருக்கவில்லை.

பின்னர் போர் முடிவுக்கு வந்ததையடுத்து திருகோணமலை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கின் முக்கிய பகுதிகளுக்கு நேரடியாகவே விஜயங்களை மேற்கொண்டு நிலைமைகளை பார்வையிட்டேன். அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினேன்.

விசேடமாக, பாடசாலைகள் மீள்கட்டுமானம், குடிதண்ணீருக்கான கிணறுகள் நிர்மாணம், உள்ளிட்டவற்றுக்கு உதவிகளை வழங்க முடிந்திருந்தது.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போதைய சூழலில் மிகவும் பாதிப்படைந்திருப்பதனால் அவர்களுக்கு உரிய உதவிகளை தெற்கிலிருந்து தான் செய்ய வேண்டும். அவர்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்காக பிரார்த்தனைகளை மேற்கொள்கின்றோம்.

இதேநேரம், தமிழ் மக்களிடையே பௌத்த மதகுருமார்கள் தான் இந்த நாட்டில் இனப்பிரச்னை உள்ளிட்ட அனைத்துப் பிரச்னைகளும் நீடிப்பதற்கு காரணமாக இருக்கின்றார்கள். அவர்கள் தான் பிரச்னைகளை தீர்ப்பதற்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் என்ற நிலைப்பாடு விதைக்கப்பட்டுள்ளது.

நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு தடையானவர்களாக இருக்கப்போவதில்லை. நானும் இலங்கையர் என்ற வகையில் தமிழர், முஸ்லிம், சிங்களவர்கள் என் பாரபட்சம் பாராமல் பிரச்னைகளுக்கு நிரந்தமான முற்றுப்புள்ளி வைப்பதற்கு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அதன் ஊடாக நிரந்தரமான சமாதானமும் சாந்தியும் நாட்டில் தோற்றம் பெற வேண்டும். அதற் காக குறித்த குழுவினரை ஆசீர் வதிக்கின்றேன்.

மேலும், தலதா மாளிகைக்கு சென்று அங்கே வரலாற்று பெருமை மிக்க வணக்க தலத்தினை பார்வையிடுமாறு கோருகின்றேன் - என்றார். இதனையடுத்து குறித்த குழுவினர் தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணில் பொது வேட்பாளரா? தனிக்கட்சியின் வேட்பாளரா?

## வெளிப்படுத்த கோருகிறார் திலும் அமுனுகம

கொழும்பு, டிசெ. 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்றால், பொது வேட்பாளராகவா அல்லது தனிக்கட்சியின் வேட்பாளராகவா என்பதை தெரிவிக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்துள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு ராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்தாண்டு ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மட்டுமல்லாது மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் எனக்கூறியது போல், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா என்பதையும் அவர் கூற வேண்டும்.

ஜனாதிபதி இது சம்பந்தமான தனது நிலைப்பாட்டை அறிவித்த பின்னர், அவரை ஆதரிப்பதா அல்லது வேறு தகுதியான வேட்பாளரை நிறுத்துவதா என்பது குறித்து பொதுஜன பெரமுன தீர்மானிக்கும்.

அப்போது எமது கட்சியினருக்கும் அவர்களின் நிலைப்பாட்டை தீர்மானிக்க முடியும். எது எப்படி இருந்தபோதிலும் அடுத்து நடக்கும் எந்த தேர்தலாக இருந்தாலும் அதில் போட்டியிடும் அளவுக்கு எமது கட்சி பலப்படுத்தப்பட்டுள்ளது.

நாங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ராஜதந்திர நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்போம். அவர் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி என்பதாலேயே அவரை ஆதரித்து வருகின்றோம்.

அதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமையவே அரசாங்கம் தற்போது செயற்பட வேண்டியுள்ளது. சாராய போத்தல் ஒன்றில் விலையை கூட நாணய நிதியமே தீர்மானிக்கின்றது.

எந்த அரச நிறுவனமும் நஷ்டத்தில் இயங்கக்கூடாது என நாணய நிதியம் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் செயற்பட்டுள்ளதால், பல வருடங்களாக பில்லியன் ரூபா நஷ்டத்தில் இயங்கிய இலங்கை மின்சார சபை நஷ்டமில்லாமல் இயங்கும் நிலைமைக்கு வந்துள்ளது.

வாழக்கை செலவு அதிகம், வரி சுமை அதிகரித்துள்ளது என சிலர் முறையிடுகின்றனர். 100க்கு ஒரு வீதம் கூட வரியை அதிகரிக்காத தலைவரை போராட்டம் நடத்தி வீட்டுக்கு விரட்டியதால், தற்போது வரியை செலுத்த வேண்டியதே நாட்டு மக்களுக்கு இருக்கும் ஒரே வழி-என்றார். (அ)

## போகம்பரை சிறைச்சாலையை 5 நட்சத்திர ஹோட்டலாக மாற்ற திட்டம்



கொழும்பு, டிசெ. 10

கண்டி போகம்பரை சிறைச்சாலையை சர்வதேச தரத்திலான ஐந்து நட்சத்திர விருந்தகமாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்திற்கு உள்ளூர் முதலீட்டாளர் ஒருவரையும் தெரிவு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், போகம்பரை சிறைச்சாலையின் வரலாற்று சிறப்பை சிதைக்காமல் விடுதி ஒன்று நடத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

யால - ஹில்டன் விருந்தகத்தை நிர்மாணித்த நிறுவனத்தினரிடம் இந்த நிர்மாணப் பணிகளும் ஒப்படைக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

லதா

# வாழ்க்கை இனிக்க என்ன செய்ய வேண்டும்?

கூட்டம் கூட்டமாக வாழ்ந்திருந்த காலம் மாறி குடும்பம் என்கிற அமைப்பை ஏற்படுத்தி, கூட்டுக் குடும்பமாக ஒரே குடும்பத்தில் பதினைந்து இருபது என நபர்கள் வாழ்ந்திருந்த காலம் போய், இப்போது இணையர்களும் அவர்தம் பிள்ளைகளும் மட்டுமே குடும்பம் என்று ஆகிவிட்டது. அடுத்த கட்டமாக இணையர்களுக்குள்ளேயே சிறிது இடைவெளி தேவை, பிள்ளைகள் வாழ்வில் நாம் மிகவும் குறுக்கிடக் கூடாது, அவர்களுக்கான இடத்தை அளிக்க வேண்டும் என்கிற இடத்தில் வந்து நிற்கிறோம். அந்தக் காலம்போல் மனிதர்கள் இப்போது இல்லை, பொறுமை இல்லை, ஒத்துப்போகும் தன்மை இல்லை, சுயநலம் அதிகமாக ஆகிவிட்டது, அப்படி இப்படி எனப் புலம்புவதில் ஒரு பலனும் இல்லை. அர்த்தமும் இல்லை.



இயற்கையில் மனிதன் மட்டுமல்லாமல் ஒவ்வோர் உயிரும் பயிர்களும் மரங்களும் செடிகளும் காலத்திற்கு ஏற்ப தங்களைத் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சியில் தகவமைத்துக்கொண்டேதான் இருக்கின்றன. பரிணாம வளர்ச்சி என்பது இதுதான். இந்தப் பரிணாம வளர்ச்சியில் நம் பரிமாணங்களும் அதற்கேற்ப மாறிக்கொண்டே வந்தால்தான் குழப்பங்களும் பிரச்சினைகளும் இல்லாமல் மனிதர்கள் இப்புவியில் சிறிதளவாவது நிம்மதியாக வாழ இயலும்.

**வேலை பகிர்வு வேண்டும்**

கூட்டுக்குடும்பங்களில் சிலர் படித்து வேலைக்குப் போகலாம், பள்ளி செல்லாதவர்கள் விவசாயத்தையோ குடும்பத்திற்கான மற்ற உதவிகள் புரிவதையோ வேலையாக அமைத்துக் கொள்ளலாம். குடும்பத்தில் ஒருவரே தலைவராக இருப்பார். வருமானம், செலவு என்று எல்லாவற்றையும் அவரே நிர்வகிப்பார். என் வருமானம், உன் வருமானம் என்கிற பிரிவினைகள் இருக்காது. வீட்டு வேலைகளையும் பகிர்ந்தே செய்வார்கள். ஒருவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனால் நிறைய நபர்கள் இருக்கும் வீட்டில் அவரைக் கவனித்துக்கொள்வது அவ்வளவு சிரமமாக இருக்காது. பெண்கள் பொதுவாக வீட்டிலிருந்தபடி வீட்டை மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், இன்றைய காலகட்டம் அப்படியல்ல. இணையர்கள் இருவரும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் வீட்டு வேலைகளை ஒருவர் மட்டுமே கவனிக்க இயலாது. அதனால், அதையும் இருவரும் பகிர்ந்துதான் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. பணம் ஈட்டுவதில் இருவரும் பங்கெடுக்கும் நிலையில் பொறுப்புகளிலும் வேலைகளிலும் ஆண்-பெண் பாகுபாடின்றிப் பங்கேற்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். பெரியவர்களை வீட்டில் வைத்துப் பார்த்துக் கொள்ள இன்றைய காலகட்டத்தில் யாருக்கும் நேரமும் இருப்பதில்லை, கூட்டுக்குடும்பங்கள்போல் மாற்றி மாற்றிப் பார்த்துக்கொள்ள மனிதர்கள் இல்லாததால் ஒருவரே பார்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகையில் அலுப்பும் சலிப்பும் ஏற்படுவதும் இயற்கையே.

**பிள்ளைகளை எதிர்பார்க்க வேண்டாம்**

அதேபோல் மனிதர்களின் தேவைகள் அதிகமாகிவிட்டதால் அவர்களின் செலவுகளும் அதிகமாகிவிட, பெற்றோர்களுக்கான செலவு பிள்ளைகளுக்குச் சுமையாகத் தோன்ற ஆரம்பித்து விடுகிறது. "நாங்கள் எவ்வளவோ பாடுபட்டு வளர்த்தோம். எங்களைக் கவனித்துக்கொள்வதில்லை" என்று புலம்புவதில் ஒரு பலனும் இல்லை என்பதையும் உணர வேண்டும். அதனால், பெற்றோர்களும் முடிந்தவரை பிள்ளைகளுக்கெனத் தங்கள் பணம், நேரம் எல்லாவற்றையும் மொத்தமாகச் செலவு செய்துவிட்டுப் பிற்காலத்தில் அவதிப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, சம்பாதிக்கும்போதே பிற்காலத்திற்கெனக் கொஞ்சம் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். முடிந்தவரை தியாகங்களைக் குறைத்துக் கொண்டு, தங்கள் உடல்நிலையையும் கவனித்துக்கொள்ள வேண்டும். தங்களுக்கென சில நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதால், வயதான பிறகு பிள்ளைகளின் உதவியின்றித் தங்களைப் பார்த்துக் கொள்ள உதவியாக இருக்கும்.

பிள்ளைகள் மனமுவந்து செய்தால் அதை வரமென கொள்ள வேண்டிய காலத்தில் இருக்கிறோம். மற்றபடி அவர்கள்தாம் வயதான பிறகு நம்மைக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு இல்லாமல் ஆரம்பத்திலிருந்தே நம் வயோதிகத்தையும் மனதில் கொண்டு வாழ்ந்துவிட்டால், உறவுகளுக்குள் பிரச்சினைகள் குறையும். கழிவிரக்கம் இல்லாமல் நிம்மதியாக இருக்க வழிவகுக்கும்.

**ஆரோக்கியமான விவாதம்**

பெண்களுக்கும் படிப்பும் தொழிலும் முக்கியம். நாளை எந்தச் சந்தர்ப்பத்திலும் தனியாக நிற்க வேண்டிய அவசியம் வந்தால் பெற்றோரையோ, உடன்பிறந்தவர்களையோ எதிர்பார்க்காமல் தன்னால் தன்னையும் பிள்ளைகள் இருந்தால் அவர்களையும் வாழ வைக்க முடியும் என்கிற தன்னம்பிக்கை இருப்பது அவசியம்.

இணையர்களுக்குள் கருத்து வேற்றுமை இருந்தால் மறைத்துவைத்து, மனதிற்குள் புழுங்கி ஒரு நாள் ஒட்டுமொத்தமாக வெடித்துப் பிரிவைத் தேடுவதைவிட அவ்வப்போது ஒருவர் கருத்தை ஒருவர் மதித்து அமர்ந்து விவாதித்து புரிந்துகொள்ள முயற்சி செய்தால் பிற்காலத்தில் பிரிவுக்கு வழிவகுக்காமல் இருக்கும். எவ்வளவு நெருக்கமான உறவாக இருந்தாலும் ஒவ்வொரு மனிதரின் தேவையும் வெவ்வேறாக இருக்கலாம் என்கிற புரிதல் அவசியம். அவர்களுக்கு என்ன தேவை என்று நாமே யூகிப்பதைவிட அவருக்கு என்ன வேண்டும் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொடுப்பதுதான் உறவைப் பலப்படுத்தும்.

எல்லாரும் இங்கே தனி மனிதர்தான் என்பது எவ்வளவு உண்மையோ அதேபோல் மனிதர்கள் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்பவர்கள் என்கிற உண்மையையும் உணர வேண்டும். இணையர், பெற்றோர், பிள்ளைகள், உடன்பிறந்தவர்கள் என்கிற உறவுகளைத் தாண்டி நமக்கென ஒரு நட்பு வட்டம் மிகவும் அவசியம். ரத்த உறவுகளை நாம் தீர்மானிப்பதில்லை. ஆனால், நண்பர்கள் என்பது நம் தேர்வு. அதனால், இங்கு புரிதலும் விட்டுக்கொடுத்தலும் தானாகவே அமைந்துவிடுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

**ஆதிக்கம் வேண்டாம்**

அன்பு என்கிற ஒன்றுதான் இவ்வுலகைச் சுழல வைத்துக்கொண்டிருக்கிறது. அதன் தேடல்தான் இங்கே புரிந்து கொள்ளப்படாமல் வெவ்வேறு உருவம் கொண்டு ஒருவரை ஒருவர் காயப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆதிக்கம் செலுத்த முயலாமல், அன்பை வியாபாரமாக்காமல், எவ்வளவு உரிமையுள்ள உறவாக இருந்தாலும் நம்மையும் மதித்து, பிறரையும் மதித்து, வேண்டிய இடைவெளியை அளித்து, மற்றவர் சுதந்திரத்தில் தலையிடாமல், நம் சுதந்திரத்தையும் தக்கவைத்துக் கொண்டு வாழ்ந்தாலே போதும்.

சுதந்திரம் என்பது ஒவ்வொரு உயிருக்கும் தேவையானது. அதேநேரம் சுதந்திரம் என்பது இலவசமாக வருவதில்லை. பொறுப்புணர்வுடன் இணைந்து வந்தாலே அது உண்மையான சுதந்திரம். வாழ்க்கை மிகவும் எளிமையானதும் தற்காலினமானதும் ஆகும். நமக்குக் கிடைத்திருக்கும் இந்தத் தற்காலிக வாழ்வில் எதற்கு இவ்வளவு குழப்பங்களை நாமே விளைவித்துக் கொள்ள வேண்டும்? வாழ்வதற்குத்தானே பிறந்திருக்கிறோம்? போவதற்கு முன் அதை வாழ்ந்துவிட வேண்டாமா?

காலமாற்றத்தைக் கண்டு அஞ்சாமல், அதைப் புறக்கணிக்க எத்தனிக்காமல், அதை முழுமனதுடன் ஏற்று, அதற்குத் தகுந்த மாதிரி நம்மைத் தகவமைத்துக் கொண்டால்தானே நாம் பெருமை கொள்ளும் ஆறாம் அறிவு நமக்கு இருப்பதாக ஆகும்? மற்ற உயிர்கள் அனைத்தும் இதைச் செய்யும்போது நாம் செய்ய மறுத்தால் நமக்கு என்ன பெயர் வைப்பது?

